

பி. ஸ்ரீ.

31. என்ன காதல்! என்ன கைங்கரியம்!

"தாடகையா விழுந்தாள்? ராவணனுடைய வெற்றிக்கொடி யல்லவா இற்று விழுந்துவிட்டது?" என்று மயங்கிப் போனார்கள். "தாடகையைத் தொடர்ந்தும், மற்ற அரக்கர்களைத் தொடர்ந்தும், திரிந்து கொண்டிருந்த யமன் அந்த 'யமகாதகர்'களான அரக்கர்கள் மூலமாகத் தன் சோலைத் தொழிலை எவ்வளவோ சிறப்பாகத்தான் நடத்திக் கொண்டிருந்தான்! ஆனால் இப்போது ராவணன் பாட்டியின் உயிரையும் குடித்து விட்டான்! இந்த வெறியிலே இனிமேல் மற்ற அரக்கர்களையும் பட்சணம் செய்து விடுவான்! ருசிகண்ட பூனை உறியை விட்டுப் போகுமா?" என்று குதூகலமடைந்தார்கள். இச்சமைய பெரு மகிழ்ச்சியில் தாங்கள் இனி ராவணேச்வரனுக்கு அடிமை இல்லை! — என்று கூடக் கனவு காணத் துணிந்து விட்டார்களாம் தேவர்கள்.

வான வில்லின்மீது பூமழை!

அந்த நினைப்பிலே, தேவ ராஜ்யத்திற்குச் சுதந்திரம் இனி வந்துவிடும் என்று கூடத் தோன்றவில்லை; சுதந்திரம் வந்து விட்டதாகவே தோன்றி விட்டதாம். எதிர் காலத்தை இறந்த காலமாக்கிய அந்த நெஞ்சத் துணிவோடு தாங்களே அந்த வெற்றியை அடைந்து விட்டவர்களைப் போல் 'ஜம்'மென்று வான வீதியிலிருந்து இறங்கி வருகிறார்கள் விசுவாமித்திரனை நோக்கி.

வந்து அவ்வளவு சந்தோஷத்தையும் அந்த முனிவனோடு எப்படிப் பங்கிட்டுச் சொல்கிறார்கள்! பார்க்கலாமே;

"யாமும்எம் இருக்கை பெற்றோம்;
உனக்(கு)இடை யூறும் இல்லை;
கோமகற்(கு) இனிநீ தெய்வப்
படைக்கலம் கொடுத்தி" என்னா
மாமுனிக்(கு) உரைத்துப் பின்னர்
விற்கொண்ட மழைபோ னான்மேல்
பூமழை பொழிந்து வாழ்த்தி
விண்ணவர் போயி னாரே.



[கோமகற்கு—சக்ரவர்த்தி மகனுக்கு. என்ன—என்று. விற்கொண்ட—வில்லைக் கொண்ட. மழை—(இங்கே) மழை பெய்யப் போகும் நீல மேகம். அனான்—அன்னான்; போன்றவன். விண்ணவர்—தேவர்.]

"எங்கள் சுதந்திரத்திற்கும் இடையூறில்லை; உன் யாகத்திற்கும் இடையூறில்லை!" என்று மஹரிஷியைப் பார்த்துச் சொன்னவர்கள்,—"இனி நீ ராமனுக்கு உன்னிடத்திலுள்ள அஸ்திரங்களை யெல்லாம் கொடுப்பாயாக" என்று வேண்டிக் கொள்ளுகிறார்கள். ராமன் சுத்த வீரன் என்பது தெரிந்துவிட்டதல்லவா? எனவே, "நம்பிக் கொடுக்கலாம் எப்பேர்ப்பட்ட தெய்வத்தன்மை வாய்ந்த ஆயுதங்களையும். தைரியமாக உபயோகிப்பான்; தரும வழியில் உபயோகிப்பான்" என்று குறிப்பாகக் கூறுகிறார்கள்.

இப்படி விசுவாமித்திரனை நோக்கித் தங்கள் கருத்தை உணர்த்திவிட்டு, இருப்பிடம் போவதற்கு முன், ராமனுடைய அந்த விஜய சௌந்தரியத்தையும் நோக்கினார்களாம். கண்ணும் கருத்தும் ஒருங்கே குளிர. நோக்கியதும், "ஆஹா! என்ன வசீகரமான அழகு!" என்று மோகித்துப் போனார்கள். போரிலே சீறிய அழகு இப்போது ஆறிக் கொஞ்சுகிறது அந்த மேனியிலே!



மழை மேகத்திற்கிடையே 'இந்திர வில்' என்ற வானவில் வீசியிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அவ்வளவு மோகனமாக இருக்கிறது, ஜகன்மோகன வீர மூர்த்தியை ஜகன் மோகன சாந்த மூர்த்தி யாக்கிய தெய்விக அழகும்! தாடகா யுத்தத்தில் "பொன்னெடுங் குன்றம்"போல், புயல் - காற்றைப் போல், ஜொலித்த வீர சௌந்தரியம், இப்போது வான வில்லைப் போல் வசீகரிக்கிறதாம் தேவருள்ளத்தை.

இரத்தின ஹாரமும் பொன்னாபரணமும் மின்னிக் கொண்டிருந்த நீலச் சுடர் மேனியிலே அந்த விஜய கோதண்டம் என்ற வில்லும் எவ்வளவு அழகாய் இசைந்திருக்கிறது! ஆபத்தையும் ஆபரணமாக்கிக் கொண்ட இந்த அழகைக் கண்டதும், பூ மழை பொழிந்து வாழ்த்துகிறார்களாம் தேவர்கள்.

இயற்கை-அழகுகளிலே தெய்விக அழகு கண்ட கவிஞனுள்ளம், வானவில்லின் வசீகர நீலம், சிவப்பு முதலான வர்ண ஜாலங்களிலும் மோகித்துப் போயிருக்க வேண்டும். "அந்த வான வில்லின்மீது பூவைப் பொழிந்து வழிபட வேணும்!" என்று கூட ஆசைப்பட் டிருக்கவேண்டும் அந்தக் குழந்தையுள்ளம். அவ்வளவு பக்தி - உணர்ச்சியுடன் கம்பன் வானத்திலும் பூமியிலும் பார்த்துப் பார்த்துப் பரவசமான இயற்கை - அழகுகள் தானே, கம்ப - ராமனாக உருவெடுத்து வந்திருக்க வேண்டும்!

"கம்ப ராமாயணத்தில் இயற்கை-அழகுகளைப் பார்க்க முடியவில்லையே! கம்பன் இயற்கைக் கவிஞனில்லையே!" என்று கவலைப் படுகிறவர்கள், "விற் கொண்ட மழையனன் மேல்—பூமழை பொழிந்து வாழ்த்தி" என்பதுபோன்ற செய்யுட் பகுதிகளைத் திரும்பத் திரும்பப் படித்துப்பார்க்க வேண்டும்; பாடிப் பார்க்க வேண்டும்.

தேவர்கள் பூமழை பொழிந்து மறைந்து போனதும், அந்தப் பாலைவனம் அந்தப் பூமழையினாலேயே குளிர்ந்து போயிற்றாம் விசுவாமித்திர ராம லட்சுமணர்களுக்கு. ஆனால், அந்த வெற்றிப் பெருமிதமும் உள்ளக் குளிர்ச்சியுமே போதும் அந்த வனத்தையும் அப்படிக் குளிரச் செய்வதற்கு!

தன்னை மருந்தாக்கிய மருத்துவன்

தாடகை — வனத்தைக் கடந்து போனதும், விசுவாமித்திரன் தேவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்க ராமனுக்கு அஸ்திரங்களைக் கொடுக்கிறான். ராமனுடைய சாந்தமான விஜய சௌந்தரியத்திற்கு வானவில்லோடு கூடிய மழைமேகத்தை உபமானமாக்கிய கவிஞன், குறிதவறாத அந்த அஸ்திரங்களுக்கு என்ன உபமானம் கொடுக்கப் போகிறான்?

கம்பன் பாடிக் கொண்டிருக்கிறான் ராமாயணத்தின் இந்தப் பகுதியை ஆனந்தமாக. அருமைத் தோழனும் ஒப்பற்ற கலைவள்ளலுமாகிய சடையப்பனும் பிறரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆனந்தமாக. பளிச்சென்று காதிலே விழுகிறது பின் வரும் பாட்டு:

விண்ணவர் போய பின்றை,
விரிந்தபூ மழையி னூலே
தண்ணெனும் கானம் நீங்கித்
தாங்கருந் தவத்தின் மிக்கோன்,
மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்தெனும் சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன
படைக்கலம் அருளி னானே !

[பின்றை — பின்பு. தண் எனும் — குளிர்ச்சி அடைந்த. தாங்கரு — பிறரால் தாங்குவதற்கு அருமையான. வெண்ணெய் — வெண்ணெய் நல்லூர்; சடையப்ப முதலியாரின் ஊர்.]

திகைத்துப் போயிருப்பார்களல்லவா, இந்த உபமானத்தையும் நன்றி அறிவையும் தெரிந்து கொண்டதும், சடையப்பன் முதலானவர்களெல்லாம் ?

பூமியிலே வறுமை நோய் எங்கே வந்தாலும் அங்கே போய் உபகரிக்குமாம் சடையப்பனுடைய வள்ளன்மையும். தன்னுடைய ஊர், தன்னுடைய நாடு, உற்றார், உறவினர் என்ற குறுகிய திருஷ்டியே கிடையாது. இலங்கைத் தீவில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்தை நிவர்த்திக்கக் கப்பல் கப்பலாய் நெல் அனுப்பி வைத்தானாம். இத்தகைய லோகோபகாரியை "மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தவன்" என்று கூடக் கம்பன் சொல்ல வில்லை; "மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து!" என்றே குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

"உதவுவேன்" என்ற ஒரு சொல் சொல்லி யிருந்தால் போதுமாம்; அந்தச் சொல் தவறுவதே இல்லையாம். அத்தகைய சொல்லைப் போல் குறி தவறாத அஸ்திரங்களை ராமனுக்குக் கொடுத்தருளினானாம் விசுவாமித்திரன்.

மஹரிஷிகளின் சொல்லும், மஹா கவிகளின் சொல்லும் ஏற்கெனவே உபமானமாகி விட்டன ராமனுக்கு. இப்பொழுது ராமனுக்குக் கிடைக்கும் பாணங்களுக்குக் கலா ரஸிகனான சடையப்ப வள்ளலின் சொல் உபமானமாகிறது !

இளையவன் போன்ற ஆயுதங்கள்

இந்தப் பாட்டைக் கேட்டதும் சடையப்பன் நாணத்தால் தலை குனிந்திருக்க வேண்டும். ஆனால் இது முகஸ்துதியல்ல என்பதற்கு அந்த அகமே சாட்சிதான் !

பிறகு கம்பன் அந்த அஸ்திரங்களுக்கும் ராமனுக்கும் ஏதோ ஒரு சம்பாஷணை நடப்பதாகக் கற்பனை செய்கிறான். குனிந்த தலை நிமிர்ந்து கேட்கத் தொடங்குகிறான் சடையப்பனும் :—

"மேவினம், பிரிதல் ஆற்றேம் ;
வீர! நீ விதியின் எம்மை
ஏவின செய்து நிற்றும்,
இளையவன் போல!" என்று
தேவர்தம் படைகள் செப்பச்,
"செவ்வி(து)!" என்(று) அவனும் நேரப்,
பூவைபோல் நிறத்தி னாற்குப்
புறத்தொழில் புரிந்த அன்றே !

[மேவினம் — அடைந்தோம். பிரிதல் ஆற்றேம் — பிரிய மாட்டோம். விதியின் — முறைமையாக. நிற்றும் — நிற்போம். இளையவன் — தம்பியாகிய

லட்சுமணன். செய்விது—நல்லது. நேர—உடன்பட. பூவை—காயாம் பூ என்ற நீல மலர். புறத்தொழில்—குற்றேவல்.]

சிறவனுகிய ராமன், தேஜோமயமான அந்தப் புதுமையான அஸ்திரங்களை யெல்லாம் அப்படியும் இப்படியும் திருப்பித் திருப்பிப் பார்க்கிறான், அதிசயமாக. அப்போது அவை ஏதேதோ பேசுவது போல் ஜொலிக்கின்றனவாம், — அந்த ஒளிதானே ஒலிகளாகி விட்டது போல. என்ன பாஷையில் எப்படிப் பேசுகின்றனவோ? ஆனால் அந்தப் பேச்சு — அந்த மௌனப் பிரசங்கம் — விளங்கி விடுகிறது ராமனுக்கு!

"வீரனே! உன்னை அடைந்தோம்; இனி உன்னை விட்டுப் பிரிய மாட்டோம்!" என்று ஆசையோடு பேசுகின்றனவாம். வீரத்தோடு நீதியும் தர்மமும் ராமனிடம் பொருந்தி யிருப்பதால், "நீ முறையாக ஏவின தொழில்களை யெல்லாம் தவறாமல் செய்வோம்!" என்கின்றனவாம். எப்படி? யாரைப் போல? இங்கும் உபமானத்தைப் பாருங்கள். "இளையவனாகிய லட்சுமணன் போல!" என்று சொல்லுகின்றனவாம் அந்த ஆயுதங்களெல்லாம். தனக்கென்று விருப்பு வெறுப்பில்லாமல் ராம காரியத்திலே ஈடுபடும் லட்சுமண கைங்கரியத்திற்குத் தான் என்ன பாராட்டு!

சரி; இந்த உபமானங்களிலேயே மோகித்துப்போகிறது ரஸிகருள்ளம்:— "விற்கொண்ட மழை" "மன்னவர் வறுமை நோய்க்கு மருந்து" "இளையவன் போல."

"இளையவன் போல நாங்களும் உனக்கு ஏவின செய்வோம்; பிரிய மாட்டோம்!" என்று அந்த அஸ்திரங்கள் சொல்ல, ராமனும் "சபாஷ்! (செவ்விது!)" போட்டு, உடன் படுகிறானும்.

அழகு — காதல் — கைங்கரியம்

கவிஞனுக்கோ லட்சுமண கைங்கரியமும் ஆச்சரியமில்லை; ஆயுதங்கள் குற்றேவல் செய்வதும் ஆச்சரியமில்லை!

> பூவைபோல் நிறத்தி னாற்குப்
> புறத்தொழில் புரிந்த அன்றே!

என்று சொல்லும் தோரணையைத்தான் பாருங்கள்.

"இந்த அழகு சமந்த, பூப் போன்ற நீல மேனியைக் கண்டதும், கைங்கரிய ஆசை யாரைத்தான் விடப் போகிறது?" என்பது குறிப்பு. ஏதாவது சிரமம் இருந்தால் தானே குற்றேவல் குற்றேவலாகத் தோன்றும்?

என்ன அழகு! என்ன காதல்! என்ன கைங்கரியம்! வாழ்க்கை இப்படிக் காதலாகிவிட்டால் ஆனந்தம் கைங்கரியமாகி விடாதா?

* * * *

அப்பால் விசுவாமித்திரன் ராமலட்சுமணர்களை அழைத்துக் கொண்டு போய், ஒரு சோலையை அடைந்தான். "இந்தச் சோலை யாருடையது?" என்று ராமன் கேட்க முனிவன், "ஒரு காலத்தில் மகாவிஷ்ணுவே பரமபதத்தை விட்டு இங்கு வந்து இந்த வளங்களுக்கும் அழகுகளுக்கு மிடையே தவம் புரிந்து சித்தி பெற்றார்! காசியப மகரிஷிடம் இங்கே தவஞ்செய்து சித்தி பெற்றார். இதுதான் சித்தாச்ரமம். இங்கே தான் நானும் தவ வேள்வி செய்து சித்தி பெற விரும்புகிறேன்" என்று சொல்லி, மகாவிஷ்ணு தவம் செய்து இங்கு வசித்துக் கொண்டிருந்த காலத்திலே நிகழ்ந்த மகாபலி சரித்திரத்தையும் சொல்லத் தொடங்கினான்.



பி. ஸ்ரீ.

32. பலிச் சக்ரவர்த்தி

"ஸாக்ஷாத் மகா விஷ்ணு ஆனவர் பரம பதத்தை விட்டு இறங்கி வந்து இங்கே லோக க்ஷேமத்தை உத்தேசித்துத் தவஞ் செய்து கொண்டிருந்த அந்தக் காலத்திலே" என்று கதையை ஆரம்பித்தான் விசுவாமித்திரன். "அந்த நாளில் ஒருவன் உலகத்தையெல்லாம் வசப்படுத்திக்கொண்டு ஏக சக்ராதிபதி யாகி விட்டான்" என்று சொன்னான். "ஒரே ஊரில் ஒரே ஒரு ராஜாவாம்" என்ற கதையைக் கேட்கும் குழந்தைகள் போல் கேட்டுக் கொண்டிருந்தார்கள் ராம லட்சுமணர்கள்.

அந்தச் சக்கரவர்த்தியின் பலத்தையும் ஆக்ரமிப்பையும் எவ்வளவு அதிசயமாய்க் குறிப்பிட்டான் முனிவன்:—

> ஏனமன்ன னும்திறல்
> மாவலி என்பான்,
> வானமும் வையமும்
> வெளவுதல் செய்தான்.

[ஏனம்—பன்றி; (இங்கே) மகா விஷ்ணுவின் அவதாரமாகிய பன்றி. மாவலி—மகாபலி. வையம்—பூமி. வெளவுதல்—ஆக்ரமித்தல்.]

பலம் என்றதும் காட்டுப் பன்றியின் பலம் ஞாபகம் வரக்கூடியதுதான், காட்டிலே வசித்துத் தவம் செய்யும் முனிவனுக்கு. ஆனால் எந்தக் காட்டுப் பன்றியின் பலத்தைத்தான் உபமானமாகச் சொல்ல முடியும் மகாபலியின் பலத்திற்கு? ஆம்; அந்தச் சக்ரவர்த்தி மகாபலிதான். அந்த மகா பலத்தினால் கிடைத்த பெயர்தான். அதற்கு ஒப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பூமியைத் தன் பல்லால் குத்தி எடுத்து ஏந்தி வந்த அந்தப் பன்றியின்—மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய ஆதிவராகத்தின்—அந்த மகா பலத்தைத்தான் குறிப்பிட வேண்டுமாம். மகாபலியின் வெற்றி மகா பலத்தினால்தான்; கேவலம் சூழ்ச்சியால் அல்ல!—என்பதையும் உய்த்துணர வைத்தான் முனிவன்.

கொடையும் கொடுமையா?

பலசாலி பக்தனாகவு மிருந்தான். பக்தர்களிலும் விஷ்ணு பக்தன். மகா விஷ்ணுவின் ஆராதனமாகவே ஒரு யாகத்தையும் தொடங்கினான். தன்

பலம் கொண்டு சம்பாதித்த பொருள்களையெல்லாம் அந்த யாகத்திலே அந்தண
களுக்குத் தானம் செய்யவும் தொடங்கி விட்டான்.

வீர சக்ரவர்த்தி பக்தனாகவும் அதி வீரனாகிய வள்ளலாகவும் விளங்கினா
என்றால், பாராட்ட வேண்டியது தானே! ஆனால் தேவர்கள் இப்படி நினைக்
வில்லையாம். இந்தச் சோலைக்கு வந்து, தவக் கோலத்திலிருந்த திருமா
வணங்கி,

"தீயவன் வெந்தொழில்
தீர்!" என நின்றார் ; 97
நாயக னும்அது
செய்யந யந்தான்

[வெந்தொழில்—கொடுந் தொழில். தீர் — தீர்த்தருள்; ஒழித்து வி
நாயகன் — தலைவனாகிய விஷ்ணு. நயந்தான் — விரும்பினான்.]
என்கிறான் விசுவாமித்திரன்.

மகா பலசாலியும் சக்ரவர்த்தியும் பக்தனும் கொடையாளியுமாகிய மக
பலியைத் "தீயவன்" என்று தேவர்கள் ஏன் குறிப்பிட வேண்டும்? அ
னுடைய கொடைத் தொழிலும் "கொடுந் தொழி"லா? தேவர்கள் சொன்ன
தைத் திருமாலும் ஒப்புக்கொண்டு தன் பக்தனையே தான் தண்டிக்க விரும்பு
தற்குக் காரணம் என்ன? நடக்க நடக்கப் பார்க்கலாமே.

"ஆல் அமர் வித்து"

மகாபலியைத் தண்டிக்க மகாவிஷ்ணு தம்முடைய வராக, நரசிம்ம அ
தாரங்களின் மகாபலத்துடன் வந்தாரா? அல்லது தமது விசுவ ரூபத்துட
னேயே வந்து விட்டாரா? அப்படி ஒன்றுமில்லையாம்.

காலம்நு னித்(து)உணர்
காசிப னுக்கும்
வால்அதி திக்கும் ஓர் 98
மாமக வாகி,
நீலநி றத்து
நெடுந்தகை வந்(து)ஓர்
ஆல் அமர் வித்தின்
அருங்குறள் ஆனான்.

[நுனித்து - நுட்பமாக ஆராய்ந்து. வால் - (இங்கே) சுத்தமான. ம
மகவு - சிறந்த குழந்தை. நெடுந் தகை - பெருங் குணங்களையுடைய பெரு
மான். ஆல் அமர் வித்து - ஆல மரம் முழுவதும் சூட்சமமாக அமர்ந்திருக்கப்
பெற்ற விதை. வித்தின் - விதையைப் போல. அருங் குறள் - அரிய குள்ள
வடிவம்.]
என்கிறான் முனிவன்.

சென்ற காலம், நிகழ் காலம், வரும் காலம் என்ற முக்காலத்து விஷய
களையும் நுட்பமாக ஆராய்ந்து உணரும் சக்தியுள்ள காசியப மகரிஷிக்கு
அவருடைய தூய பத்தினியாகிய அதிதி தேவிக்கும் பிள்ளையாக வந்து பிறந்த
ராம் மகாவிஷ்ணு. குறள் வடிவம் அல்லது குள்ள வடிவமாகச் சுருங்கி
விட்டாராம், "நீல நிறத்து நெடுந்தகை"—"என்ன குள்ளப் பிள்ளை!" என்
அதிசயிக்கும்படி — மகாபலியை வஞ்சித்த கள்ளப் பிள்ளை என்று பெய
வாங்கும்படி.

கடலின் நீலமும் வானத்தின் நீலமும், எல்லையற்று விரிந்து கிடக்கும் ஒரு
மகா ரட்சக சக்தியை ஞாபகப் படுத்துகிறது பக்தி - உள்ளம் கொண்டவர்க
ளுக்கு. எனவே மகாவிஷ்ணுவை "நீல நிறத்து நெடுந்தகை" என்கிறார்க

அதே விஷ்ணு குள்ளனாய்க் குறுகிப் போனதால் அந்த மகா சக்தியும் குன்றிப் போய் விட்டதாக அர்த்தமில்லையாம்.

ஆலமரம் தன் கிளைகளோடும், விழுதுகளோடும், எத்தனையோ பறவைகளுக்கு உணவும், எத்தனையோ மனிதர்களுக்கு நிழலும் கொடுக்கக் கூடிய தன்மைகளோடும், ஒரு சிறு விதைக்குள்ளே அமர்ந்து கிடக்க வில்லையா? கோடிக் கணக்கான வருஷங்களாகப் பரம்பரையை ஒட்டி வந்திருக்கும் இயல்புகளும், இன்னும் எத்தனையோ கோடி வருஷங்களாகச், சிறந்து நிற்கப் போகும் தன்மைகளும் ஆகிய ஆலமரத்தின் அற்புத தத்துவங்களெல்லாம் அமர்ந்து கிடக்கின்றனவாம் அந்தச் சின்னஞ் சிறு விதைக்குள்ளே. அப்படியே அண்ட கோடிகளை யெல்லாம் வியாபித்திருக்கும் எல்லையற்ற மகா சக்தி முழுவதும் அமர்ந்து அடங்கிக் கிடந்ததாம், "அருக் குறளா"கிய அற்புத வடிவத்திலே.

இந்தக் கருத்துக்களை யெல்லாம் எவ்வளவு வசீகரமாக வெளியிடுகின்றன,

நீலநிறத்து
நெடுந்தகை வந்(து)ஓர்
ஆல்அமர் வித்தின்
அருங்குறள் ஆனான்

௧0

என்ற தெய்வப் பாடல்கள்!



பிரம்மசாரி வேஷத்திலிருந்த இந்தச் சித்திரக்குள்ளனுடைய அற்புதமான தோற்றத்தையும், இவன் மகாபலியை நோக்கிப் போவதையும் எவ்வளவு பிரத்தியட்சமாக்கி விடுகிறது கவிதை:

முப்புரி நூலினன்,
முஞ்சியன், விஞ்சை
கற்பதோர் நாவன்,
அனற்படு கையன்,
அற்புதன், அற்புத
ரேஅறி யும்தன்
சிற்பதம் ஒப்பதோர்
மெய்க்கொடு சென்றான். 99

[முப்புரி நூல் - மூன்று வடமாகிய பூணூல். முஞ்சியன் - முஞ்சிப் புல் என்ற ஒரு வகைப் புல்லைத் திரித்து அரைஞாண் போல் கட்டிக் கொண்டிருப்பவன். விஞ்சை - வித்தை. நாவன் - நாக்கையுடையவன். அனல் படு - அனல் பொருந்திய. சிற்பதம் - சித்பதம்; ஞான சொரூபம். மெய்க் கொடு - மெய் அல்லது உடம்பைக் கொண்டு.]

பிரம்மசாரிக் கோலத்திலே குள்ளன் போவதைப் பாருங்கள், பூணூலும் புல்-அரை நாணுமாக. வித்தை கற்பதிலேயே பழகிய நாக்கு இப்போது ஏதோ ஒரு அழகான வேத மந்திரத்தை அழகாய் உச்சரித்துக் கொண்டு போகிறதாம். பிரதி தினமும் அக்கினி வளர்க்கும் அந்தக் கையை வீசிக் கொண்டு போகிறானாம்.

பகவானுடைய இந்தச் சிறிய உருவத்திற்குப் பகவானுடைய சித் சொரூபம் என்ற அதிசூட்சுமமான ஞான சொரூபத்தையே உபமானமாக்குகிறான் முனிவன். ஆம்; அந்த முகத்திலே — என்? அந்த மேனி யெங்குமே — அப்படி வீசுகிறதாம் ஞான ஒளி, பிரம்ம தேஜஸ், பிரமாதமாக.

பாட்டைப் பாடிப் பாடிப் பாருங்கள். இந்த அற்புதக் குள்ளன் தன் சிறிய கைகளையும் கால்களையும் வீசி நடக்கும் அந்த நடையைக் கூடப் பார்த்து விடுகிறோம், இந்தச் செய்யுளடிகளின் ஓசைப் பொலிவிலே.

இத்தகைய விசித்திரக் குள்ளனான பிரம்மசாரி தன்னை நோக்கி வருவதை அறிந்ததும், மகாபலி என்ன செய்கிறான்? உருவம் கண்டு இகழ்ந்தானா? மரியாதைக் குறைவு கொஞ்சமாவது உண்டா?

அன்(று)அவன் வந்த(து)
அறிந்(து),உல கெல்லாம்
வென்றவன் முந்தி
வியந்(து)எதிர் கொண்டான்: 100
"நின்தனில் அந்தணர்
இல்லை; நிறைந்தோய்!
என்தனில் உய்ந்தவர்
யார்இனி?" என்றான்.

[முந்தி—முற்பட்டு. நின்தனில்—உன்னைக் காட்டிலும். நிறைந்தோய்—(ஞானம்) நிறைந்தவனே. உய்ந்தவர்—பிழைத்துப் போனவர்; கடைத்தேறினவர்.]

உலகத்தை யெல்லாம் வென்ற சக்ரவர்த்தி எதிர்கொண்டு போனான் அழைத்து வர வேணுமென்று. பார்த்ததும் பிரமித்துப் போனான். அந்தத் தேஜஸிலே உருவத்தை மறந்தான். "உன்னைக் காட்டிலும் உயர்ந்த அந்தணர் இல்லை!" என்று உபசரித்தான். "உன்னை எதிர்கொண்ட என்னைக் காட்டி

ரும் உயர்ந்து போனவர் — உயர்ந்து போனவர்தான் — யார் இருக்க முடியும்?'' என்றும் சொல்லி விட்டான்.

இந்த உபசாரத்திற்கு எதிர் உபசாரம் சொன்னான் குள்ளனும். யாசகத்தில் என்ன மாட்சிதான் இருக்க முடியும்? எனினும் "உன்னைப் போன்ற வள்ளலிடம் யாசிக்க வந்தவர்களோ பாக்கியசாலிகள், மாட்சிமைப்பட்டவர்கள்!'' என்றான். "அப்படி யாசகர்களுடைய விருப்பத்திற்கும் மேற்பட வீசுகிறது பொருள்களை, உன்னுடைய நீண்ட கை!'' என்று அந்தக் கையையும் பாராட்டினான்.

தந்தான் — தடுத்தார்!

மகாபலிக்குச் சிந்தை மகிழ்ச்சியால் நிறைந்து விட்டது. அப்போது அவன் "என்ன செய்ய வேணும்?'' என்று கேட்பதும், விசித்திரக் குள்ளன் விசித்திரமாக யாசகம் கேட்பதும், உடனே மகாபலியின் குருவாகிய சுக்கிராசாரியார் "கொடாதே!'' என்று தடுப்பதும், எவ்வளவு விரைவாக நடைபெற்று விட்டன:

சிந்தைஉ வந்(து)எதிர்
"என்செய?'' என்றான்;
அந்தணன் "மூவடி
மண் அருள்; உண்டேல்,
வெந்திற லாய்! இது
வேண்டும்'' எனுமுன்,
தந்தனன் என்றவன்,
வெள்ளித டுத்தான்.

[செய—செய்ய. உண்டேல்—உள்ளதானால். வெந்திறலாய்—கொடிய வலிமையுள்ள சக்ரவர்த்தியே. எனுமுன் — என்று சொல்லி முடிப்பதற்கு முன்னே. வெள்ளி — சுக்ராசாரியார்.]


"நான் என்ன செய்ய?'' என்று மகாபலி கேட்டதுதான் தாமசம்; பிரம்மசாரி, "மூன்று அடி மண் உத்தரவு செய்ய வேணும்'' என்று பளிச்சென்று கேட்டு விட்டான். தன் சிறிய காலால் அளந்து கொள்ளக் கூடிய மூவடி மண்தான்! அதுவும், "உன்னிடம் உள்ளதானால் கொடு!'' என்றான். "உனக்கு இஷ்டமில்லை என்றால், வசதி இல்லை என்றால், கொடுக்க வேண்டாம்!'' என்பது குறிப்பு. அந்த மூவடி மண்ணும் தனக்கு வேண்டும்; தனக்குத் தேவை—என்றும் தெரிவித்தான். குள்ளன் சொல்லி முடிப்பதற்கு முன்னமே, அவ்வளவு விபரங்களையும் கூடக் காதிலே போட்டுக் கொள்ளாமல் "தந்தேன்'' என்றான் மகாபலி: "தடுத்தேன்!'' என்றார் சுக்ராசாரியார்.

"யாசகமா இது? வஞ்சகம்!'' என்று கருதிய சுக்ராசாரியார், அந்த யாசகன் யாசித்து முடிப்பதற்குள்ளேயே "தடுத்தேன்'' என்று சொல்லி விட்டார். ஆனால் அதற்கும் முந்தி விட்டது "தந்தேன்'' என்ற வாக்கு.

* * * *

இந்தப் பாட்டிலே மகாபலியைப் பிரம்மசாரி, "வெந்திறலாய்!'' என்று அழைப்பது கவனிக்கத் தக்கது. "கொடிய பலத்தோடு கூடிய சக்ரவர்த்தியே!'' என்பது பொருள். அப்படியானால், பலம் கொடுமையானதா? இல்லை. மகாபலியின் மகாபலமும் அவசியந்தான். ஆனால் "அதை அசுரரைப் போல் உபயோகிப்பதுதான் தவறு'' என்றார் ஒரு மகாகவி. மகாபலியைப் போல் "வலிமையே உரிமை'' என்று நம்பி, மண்ணையும் விண்ணையும் அபகரித்துக் கொண்டு சக்ரவர்த்தியாகிப் பூமியையும் ஜனங்களையும் அடிமைப்படுத்தியது குற்றந்தானே; கொடுமை தானே?

சுந்தர ராமாயணம்



பி. ஸ்ரீ.

92

33. "வாமனன் மண் இது!"

"இந்தக் கருங் குள்ளனை நம்ப வேண்டாம். ஏனென்ருல் இவன் குள்ளனே இல்லை!" என்கிருர் சுக்ராசாரியார் :

"கண்டறி றத்(து) இது
  கைதவம்; ஐய!
கொண்டல்நி றக்குறள்
  என்பது கொள்ளேல்; 101
அண்டமும் முற்றும்
  அகண்டமும் மேனுள்
உண்டவன்: நீயி(து)
  உணர்ந்துகொள்" என்ருன்.

[கண்டறிந்து—ஆலோசித்துப் பார்த்ததில். கைதவம் — வஞ்சனை. கொண்டல் — நீர் கொண்ட கருமேகம். குறள் — குள்ளனுகிய வாமனன். அகண்டமும்—இறுதி யில்லாதது போலத் தோன்றும் வெளி. மேனுள்—மேல் நாள்; முன்னெரு காலத்தில்.]

"உலகங்களை இறுதி யில்லாத வான வெளியோடு ஒரு காலத்தில் பட்சணம் செய்துவிட்ட அந்த நெடியவன்தான் இன்று மூவடி மண் யாசிக்கிருன்!" என்று ஆலோசித்துப் பார்த்து, "தானம் செய்யாதே!" என்று தடுத்து விடுகிருராம் புரோகிதர்.

சிஷ்யன் பதில்

அதற்கு மகாபலி, "நீங்கள் ஒரு விஷயத்தை ஆலோசித்துப் பார்க்கவில்லையே! அதல்லவா முக்கியமான விஷயம்?" என்ற பீடிகையோடு பதில் சொல்லுகிருன் :

"நினைக்கிலை, என்கை
  நிமிர்ந்திட வந்து 103
தனக்(கு)இய லாவகை
  தாழ்வது, தாழ்வில்

கலக்கரி யானது
கைத்தலம் — என்னில்
எனக்(கு)இதன் மேல்நலம்
யாதுகொல்?" என்றான்.

[இயலா வகை—தகாத முறையில். தாழ்வில்—தாழ்வு இல்லாத. கரியான்—கரு நிறமுள்ள திருமால். கைத்தலம்—கையாகிய இடம்.]

"மகாவிஷ்ணுவே என்னிடம் யாசகத்திற்கு வந்து விட்டாரென்றால் அதுவும் நல்லது தானே! என் கை மேலும் அவன் கை கீழுமாக இருப்பதே எனக்குப் பெருமைதானே, யோகம் தானே! தங்களுடைய ஆலோசனைக் கண்ணுக்கு இந்த அம்சம் புலப்படவில்லையே, ஆசார்ய ஸ்வாமிகளே!" என்ற குருவையும் உபேட்சித்துப் பேசுகிறான் வள்ளலாகிய மகாபலி. தன் ஒரு கைக்குக் கீழே இரண்டு கைகள் தாழ்ந்து கிடப்பதைக் காண இந்தச் சக்ரவர்த்திக்குத்தான் எவ்வளவு ஆசை! எவ்வளவு பெருமை!

மகாபலியின் வண்மை மனித சீர்மையைக் கெடுத்துவிடும்!— என்ற கொள்கையோடு தான்,

வண்மை இல்லையோர்
வறுமை இன்மையால்

என்று ஏற்கெனவே கோசல நாட்டைச் சிறப்பித்திருக்கிறான் கவிஞன்.

மேலும் தன் கொள்கையை வெளியிடுகிறான் பலிச் சக்ரவர்த்தி:

மாய்ந்தவர் மாய்ந்தவர்
அல்லர்கள்; மாயா(து)
ஏந்திய கைகொ(டு)
இருந்தவர், எந்தாய்!
வீந்தவர் என்பவர்:
வீந்தவ ரேனும்,
ஈந்தவர் அல்ல(து)
இருந்தவர் யாரே?

[மாய்ந்தவர் - இறந்தவர். கொடு - கொண்டு. எந்தாய் - என் தந்தை போன்ற குருவே. வீந்தவர் - இறந்தவர்.]

"செத்துப் போனவர்களெல்லாம் செத்துப் போனவர்களில்லை!" என்று அதிசயமாக ஆரம்பிக்கிறான். ஆனால் செத்துப் போனவர்கள் யார் தெரியுமா? "சாகமாட்டாமல் கைகளை ஏந்திக் கொண்டு திரிகிறார்களே யாசகத்திற்கு அவர்கள்தான் செத்தவர்கள்!" என்கிறான். "இறந்தவர் இறந்தவர் தான்!" என்று இகழ்ந்துவிட்டு, "இறந்தவர்களிலும் கொடுத்தவர்களே இருந்தவர்கள் என்றும் இருப்பவர்கள்! இவர்களைக் காட்டிலும் சிரஞ்சீவிகளாய் இருப்பவர்கள் வேறு யார்?" என்று தன் கொள்கையை எவ்வளவு அழுத்தமாக வெளியிடுகிறான்!

சக்ராச்சாரியார் திகைத்துப் போயிருக்க வேண்டும். இதுவரையில் தம்மிடம் எவ்வளவோ பணிவாக நடந்துகொண்ட சிஷ்யனுக்கு இப்போது எவ்வளவு கோபம் வந்துவிட்டது! இந்தக் கோபத்திலும் "என் தந்தை போன்ற குருவே!" என்றுதான் அழைக்கிறான். எனினும் கடைசியாக, "கொடுக்கிறவன் கொடுப்பதையும் தடுக்கிறாயே! நீ கொடியவன்!" என்றே சொல்லி விடுகிறான், குரு என்று கூடப் பாராமல்.

இனி, மேலே என்ன நடக்கிறது
பார்ப்போம் :

முடிய இம் மொழிஎலாம்
மொழிந்து, மந்திரி
கொடியன் என்(று), உரைத்த
சொல்
ஒன்றும் கொண்டிலன் ;
" அடி ஒரு மூன்றும் நீ
அளந்து கொள்" கென, 105
நெடியவன் குறியகை
நீரில் நீட்டினன்.

[முடிய - முழுவதும். நெடியவன் - நெடுமால். குறிய - சிறிய. நீர் - தான ஜலம்.]

புரோகிதராயிருப்பதோடு சுக்ராசாரியார் முதல் மந்திரியாகவும் இருப்பவர். எனவே, "மந்திரி கொடியன்" என்று சொல்லிவிட்டானும் மகாபலி. "நல்ல குரு, நல்ல மந்திரி! இதுவோ உம்முடைய ஆலோசனைத் திறம்?" என்பது குறிப்பு.



பிறகு அவனை முகம் நோக்கிப் பாராமலே குள்ளனை நோக்கி, "அ ஒரு மூவடியும் நீ அளந்து கொள்" என்று தானம் கொடுத்து விடுகிறான்.

தானத்தை உறுதிப்படுத்துவதற்காகத் தண்ணீரைத் தாரை வார்த்து கொடுப்பது வழக்கம். அப்படி மகாபலி தாரைவார்த்துக் கொடுப்பதும், அந் நீரில் குள்ளன் தன் குறுகிய கையை நீட்டுவதும் எவ்வளவு வேகமாக நடை பெறுகின்றன !

யாசகத்திற்கு வரும்போது குறுகிக் குறுகிக் குள்ளனாகி வந்தவன், தா வித்தி பெற்ற அதே கணத்திலே, அந்தக் குறுகிய கையை நீட்டிய வண்ணமே நிமிர்ந்து விடுகிறானாம். வாமனன் திரிவிக்கிரமனாக நிமிர்ந்து போகிறான் வி விலே!—என்ற அந்த அதிசயத்தைத் தான் எவ்வளவு வேகமாகக் கவிஞன்,

> நெடியவன் குறியகை
>   நீரில் நீட்டினன்

என்று குறிப்பிடுகிறான்.

மகாபலி தாரைவார்த்துக் கொடுத்த தீர்த்தமானது, அப்போதுதான் தாமரை குளத்திலிருந்து எடுத்து வந்த குளிர்ந்த தீர்த்தம். அந்த நன்னீர், தானம் செ த்து விட்டதற்கு அறிகுறியாக அந்தக் குறுகிய கையைத் தீண்டியதும், நிமி தொடங்கிய அந்த அதிசயத்தைத் தான் எவ்வளவு தெளிவாக — அரு லிருந்து பார்க்கும் ஒருவன் பக்கத்திலிருக்கும் மற்றவர்களுக்கும் காட் வியாக்கியானம் செய்வது போல் — சுட்டிக் காட்டுகிறான் கவிஞன் :

> கயந்தரு நறும்புனல்
>   கையில் தீண்டலும்,
> பயந்தவர் களும்இகழ்
>   குறளன், பார்த்(து)எதிர்
> வியந்தவர் வெருக்கொள
>   விசும்பின் ஓங்கினன்,
> உயர்ந்தவர்க்(கு) உதவிய
>   உதவி ஒப்பவே !

[கயம்—குளம்; இங்கே தாமரைத் தடாகம். நறும் புனல்—நல்ல ச மான தண்ணீர். குறளன்—குள்ள வடிவமுள்ள வாமனன். வெருக்கொள—அச்சங்கொள்ளும்படி. விசும்பின்—ஆகாயத்திலே.]

பயந்த பிரகிருதிகள் கூட இந்தக் குள்ளனைப் பார்த்தால் பயமில்லா இகழத் தொடங்கி விடுவார்களாம். அத்தகைய பயத்தையும் இகழ்ச்சியை பளிச்சென்று விட்டு விட்டு, எதிரேயிருந்து பார்க்கத் தொடங்கி விட்டார்கள் ஆச்சரியத்தோடு, அந்தக் குள்ளன் நிமிர்ந்து பொங்கித் தங்கள் கண் முன் வளரத் தொடங்கிய அந்த அதிசயத்தை. அலட்சியமும் இகழ்ச்சியும் போ அடுத்த கணமே அந்த அதிசய உணர்ச்சியும் மறைந்து போய், பயமே ஏ விடுகிறதாம்.

எந்த இயக்கமும் தன் வளர்ச்சியிலே அலட்சியம், இகழ்ச்சி, எதிர் மரியாதை அல்லது பயபக்தி என்ற நாலு நிலைகளையும் கடந்து போகிற என்று சொல்லுகிறார்களல்லவா? இந்த வாமனனும் தன்னுடைய திரிவிக்

ட்சியிலே பலிச்சக்ரவர்த்தியின் அதிகாரிகளுடைய அலட்சியம், இகழ்ச்சி, ரியின் எதிர்ப்பு, பிறகு அதிசய உணர்ச்சி, கடைசியாகப் பயபக்தி என்ற களை யெல்லாம் கடந்து போகிறான் என்பது கவிஞன் குறிப்பு.

இந்த வளர்ச்சிக்குக் கவிஞன் கொடுக்கும் உபமானத்தைத்தான் பாருங்கள்:

உயர்ந்தவர்க்(கு) உதவிய
உதவி ஒப்பவே!

ந்த சுபாவமும் பழக்கங்களும் உள்ளவர்களுக்கு ஒருவன் எவ்வளவு கொடுத் லும் அந்த உதவி தங்கித் தோன்றுமா?

"என்ன கொடுத்து விட்டான் பிரமாதமாக? ஆயிரம் ரூபாய் தானே!" று லேசாக அடித்துப் பேசி விடுவார்கள். உயர்ந்த சுபாவமும் பண்பாடும் ளவனோ, "அஞ்சு ரூபாயா கொடுத்தான்? அந்த அஞ்சே ஐயாயிர மல்லவா? தப் பொன்னான உள்ளம் போதுமே!" என்று உணர்ச்சியோடு பாராட்டுவான்.

இந்தக் கருத்தை நாம் திருக்குறளிலும் பார்க்கிறோம்:

94

உதவி வரைத்(து)அன்று உதவி, — உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

[வரைத்து — வரை அல்லது அளவை உடையது. சால்பு — குணம்.]

உதவியானது உதவியைப் பெறுகிறவர்களின் குணத்திற்குத் தகுந்தபடி ய்து போகிறது — என்ற பொருளிலே கம்பன் இந்தக் குறளை அனுபவித் க்க வேண்டும். இப்படி அனுபவித்ததால் "உயர்ந்தவர்க்கு உதவிய வி ஒப்பவே" என்று வியாக்கியானம் செய்திருக்க வேண்டும், — குறளுக்கும் குறுகிய, எளிய, அதிசய வியாக்கியானம் என்று சொல்லும்படி.

மகாவிஷ்ணுவைக் காட்டிலும் உயர்ந்தவர்களுண்டா? அவருக்கு உதவிய வியல்லவா? அப்படி உயர்ந்து போன குள்ள மூர்த்தியின் ஒரு பாதம் பூமியை ந்தபடியே இருக்கிறது. ஆனால் அந்தக் குறுகிய அடி விரிந்து விரிந்து கம் முழுவதிலும் நிரம்பி விடுகிறதாம், பூமி சிறிது என்ற காரணத் ல்தான் அப்பாலும் பரவ வில்லையாம். மற்றொரு திருவடியோ ஆகாயம் லவதையும் ஒருசேரத் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு மேலே போவதற்குத் ம் வேறு இடமில்லை என்று தெரிந்து திரும்பி விடுகிறதாம்.

இப்படி ஓரடியால் மண்ணுலகையும், மற்றொரு அடியால் விண்ணுலகை அளக்க அதிசயத்தைச் சொல்லிவிட்டு, மூன்றாவது அடிக்கு இடமில்லாத ,, மகாபலி "இனி அடியேனது முடியே உள்ளது!" என்று, வீர பெரு யை விட்டுப் பணிந்து விட்டான் என்கிறான் கவிஞன்.

"வாமனன் மண் இது!" என்று ஆழ்வார் சொல்லுகிறாரல்லவா? "உலகம் ரச் சக்ரவர்த்திக்கும் சொந்த மில்லை; பகவானுக்கே சொந்தம்: ஆகவே லோருக்கும் பொது" என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் பலியும் குள்ளனாக வந்த பகவான் மூலமாக.



பி. ஸ்ரீ.

34. ஹாஸ்யம், அதிசயம், ஆனந்தம்

மண்ணையும் விண்ணையும் ஈரடியால் அளந்த நெடுமாலின் அந்தத் திரு வடிகளைத் தான் எவ்வளவு வசீகரமாக, ஹாஸ்ய ரஸம் சிறிது கலந்த மனோ பாவத்தோடு, வர்ணிக்கிறான் முனிவன் :

நின்றகால், மண்ணெலாம்
 நிரப்பி, அப்புறம்
சென்றுபா விற்றிலை
 சிறிது பாரென ;
ஒன்றவா னகம்எலாம்
 ஒடுக்கி, உம்பரை
வென்றகால் மீண்டது,
 வெளிபெ ருமையே !

[நின்ற—ஊன்றி நின்ற. பாவிற்று இலை—பரவியதில்லை. பார்—பூமி. என—என்று. ஒன்ற—ஒரு சேர. வானகம்—ஆகாயத்தின் இடம். உம்பர்—மேலுலகம். வென்ற—(இங்கே) கடந்து சென்ற. பெருமை—பெருததனால்.]

அதிசய உண்மை

ஒரு காலைக் கீழே மண்ணில் ஊன்றிக் கொண்டுதான் ஒரு காலால் வானத்தை யெல்லாம் அளந்தாராம் மகாவிஷ்ணு. (கம்பன் கவிதையும் இப்ப டித்தானே ?) நிலத்திலே ஊன்றிய சிறிய அடி வளர்ந்து வளர்ந்து நில வுலகம் முழுவதையும் அளந்து நிரப்பி விட்டதாம். அப்படி அளந்ததும் அப் பால் போகவில்லையாம் ; "ஒஹோ ! இந்தப் பூமி இவ்வளவு சிறியது !" என்று தான் மேலும் பாவிச் செல்லாமல் அருளோடு அடங்கி நின்று விட்டதாம். மற்றத் திருவடியோ மேலே மேலே, மேலே மேலே போய்ப் போய், வானகமெல் லாம் ஒரு சேரத் தன்னுள் ஒடுங்கச் செய்து விட்டதாம். மேல் உலகங்களெல் லாம் கடந்து சென்ற அந்தத் திருவடியும் அப்பால் செல்லக் கூடியதுதான் ;

அப்பாலுக்கு அப்பாலும் மேலோங்கிச் செல்லக் கூடியதுதான். வான வெ
பெறாமல்தான் திரும்பி விட்டதாம். கடவுள் எல்லாவற்றையும் கடந்தவ
இருந்தும், எங்குமாகி எல்லாமாகி வியாபித்து "இருளா"கிய அசுர சக்திக
ஒடுக்கி அருள் செய்கிறான் என்பது குறிப்பு.

ஈரடிக்கும் அளந்து கொள்ள இடம் தர முடியவில்லையாம் மகாபலிச் ச
வர்த்தியினாலே. இந்த நிலையில், "மூவடி தருகிறேன் என்றாயே! மற்
ஓரடிக்கு இடம் எங்கே? காட்டு!" என்று அந்தப் பொல்லாத யாசகன் கேட்
யார்தான் திகைத்துப் போக மாட்டார்? மகாபலி — வள்ளல் அல்லவ
பக்தன் அல்லவா?—"இதோ தந்தேன்: அடியேன் முடி இருக்கிறதே
என்று ஞானம் ஒளிர அகம் ஒடுங்கி முடி சாய்த்தானாம். அப்படியே அந்த அ
னுடைய முடி மூன்றாவது அடிக்கு இடமாயிற்று!

இப்படிக் கதை சொல்லும் விசுவாமித்திரன், "மூவடி மண் யாசி
குள்ளன் மிகவும் சிறியவன்தானே? ராமா?" என்று ராமனை நோக்கி அந்
பொல்லாத குள்ளனைக் குறித்து அதிசயமாகவும் கொஞ்சம் ஹாஸ்யமாக
கேட்கிறான். அதே மாதிரி உன்னையும் சிறுவன் என்று மதிப்பது சரியன்ற
என்பது குறிப்பு.

இந்தக் கேள்வியுடன் கதை முடிந்து விட்டதென்று தானே எண்ணுகி
றீர்கள்? அதுதான் இல்லை. அசுர மகாராஜ்யத்தை ஒருங்கே விண்ணி
மண்ணிலும் ஸ்தாபித்திருந்த மகாபலியின் கதை முடிந்து விட்டது. "
வன் மண் இது!" என்று தன்னுடைய ராஜ்யத்தை மண்ணிலும் ஸ்தாபி
வந்த மாயக் குள்ளனுடைய கதை இன்னும் முடிவு பெறவில்லை.

"இருளின் சக்தி"களான அசுர சக்திகளிடமிருந்து மீட்டுக்கொண்ட மூவுலக ஆட்சியையும் தேவ சக்திகளின் தலைவனாகிய தேவேந்திரனுக்கு அளித்து விடுகிறானாம் பகவான். "இந்திரனுக்கு உரிமை கிடைக்கிறது; மூன்று லோகங்களுக்கும் சுய ராஜ்ய ஒளி கிடைத்து விடுகிறது!" என்றும் முனிவன் கதையை முடிக்கவில்லை.



இறுதிக் காட்சி

இன்னும் ஒரு காட்சி,—ஒரே ஒரு காட்சி. உலகங்களையெல்லாம் இந்திரனுக்குக் கொடுத்துப் போன நெடுமால்,

ன்னுடைய பழைய பாற்கடலுக்கே போய்ச் சேர்ந்தானும்: "அங்கே ருந்து புறப்பட்டு வந்து, இங்கே இந்தச் சோலையில் தவம் கிடந்து, வாமனாவ ரம் செய்து, மகாபலி-ஆட்சியைத் தொலைத்தவன், மறுபடியும் அந்தப் பாற் டலில் போய்ப் படுத்துக் கொண்டான்" என்றுதான் கதை முடியப் போகி றா ?—"வேதாளம் பழையபடி முருக்க மரம் ஏறிக்கொண்டது" போலே!

உரிய(து) இந் திரற்கென
உலகம் ஈந்துபோய்,
விரிதிரைப் பாற்கடல்
பள்ளி மேவினான்


[இந்திரற்கென—இந்திரனுக்கு என்று. திரை—அலைகள். பள்ளி—படுக்கை. மேவினான்—பொருந்தினான்.]

என்று சொல்லத்தான் செய்கிறான் விசுவாமித்திரன்.

ஆனால் இந்தக் காட்சியை எவ்வளவு அதிசயமாகவும் ஹாஸ்யமாகவும் முடிக்கிறான், தெரியுமா? பாற்கடல் - வீட்டுக்குப் போனதும், லட்சுமி தேவி வந்தாளாம். கேட்டாளாம் கதையை அதிசயமாக. பார்த்தாளாம் உலகமெல் லாம் கடந்த அந்த அடிகளைப் பரிவுடன். "எவ்வளவோ சிரமப்பட்டு உலகமெல் லாம் அலைந்து திரிந்ததே! ஐயோ, பாவம்!" என்று சிரமம் தீரத் தன் கைக ளால் காலைப் பிடித்துக் கொண்டிருந்தாளாம். அவள் தொட்டதும் சிவந்து காட்டியதாம் அந்தக் காலும் உண்மையாகச் சிரமப்பட்டது போலவே.

இப்போது பாருங்கள் பாட்டு முழுமையும், — காட்சி முழுமையும் :

உரிய(து) இந்திரற்கென
உலகம் ஈந்துபோய்,
விரிதிரைப் பாற்கடல்-
பள்ளி மேவினான்
கரியவன்: உலகெலாம்
கடந்த தாளிணை
திருமகள் கரம்தொடச்
சிவந்து காட்டவே!



[கரியவன் - கரு நிறமுள்ள திருமால். தாள் இணை - உபய பாதம்; இரண்டு கால்கள்.]

"உலகெலாம் கடந்ததே!" என்று பரிந்து திருமகளின் மிக மெல்லிய கைகால் பிடிப்பதும், அந்தச் சிவந்த கை தொடக் காலும் சிவந்து காட்டுவதும், —ஆம், அந்த உலகளந்த காலும் அவ்வளவு மென்மையாகச் சிவந்து காட்டுவதும்,—கடவுள் - தம்பதிகளின் காதலை எவ்வளவு அதிசய, ஹாஸ்ய, பக்தி - உணர்ச்சிகளுடன், மனித உணர்ச்சிகளுக்கு எவ்வளவு பொருத்தமாக, வெளியிடுகின்றன! "உலகெலாம் கடந்த தாளிணை, — திருமகள் கரம் தொடச் சிவந்து காட்டவே!" என்ற செய்யுட் பகுதியைப் பாடிப் பாடிப் பாருங்கள்.

விசுவாமித்திரன் சொன்ன "குள்ளன் கதை" முடிந்து போகிறது. ஆ
னும் அந்தக் காட்சியை இன்னும் பார்த்துக் கொண்டிருக்க விரும்பு
கற்பனைக் கண். அவ்வளவு வசீகரமாக யிருக்கிறது முடிவு!

விட்டுப் போன கதை?

என் கற்பனைக் கண்ணோ, இந்தக் கதையை இன்னும் அதிக
பார்க்க விரும்புகிறது; சிறிது முன்னும் பார்த்துச் சிறிது பின்னும் பார்த்த
விரும்புகிறது. இத்தகைய காதலி, காதலன் தன்னைப் பிரிந்து போய்த் த
செய்யவும், பிரம்மசாரியாக இருக்கவும், எளிதில் உடன் பட்டிருப்பா
"ரொம்ப அவசரமான காரியம்: லோகத்தைக் காப்பாற்ற வேணும்; தர்ம
ரட்சிக்க வேணும். அலுவலை முடித்துக் கொண்டு ஓடி வருகிறேன்!" எ
வெளியே அலுவலாய்ப் போகும் ஒரு ஹிந்து புருஷன் சொல்வது போ
சொல்லித்தான் காதலன் போயிருப்பான். அவனைப் பிரிந்திருந்த ஒவ்வொ
கணமும் யுகமாகத்தான் கழிந்திருக்க வேண்டும் காதலிக்கு.

ஸித்தாச்ரமத்தில் தவத்தை முடித்துக் கொண்டு, வாமனவதாரத்தை
முடித்துக் கொண்டு, காதலன் திரும்பியதும், "இப்படி யெல்லாம் என்
பிரிந்து திரியலாமா? மகாபலிகளை வஞ்சிக்கலாம்; என்னையும் இனி வ
துப் பிரிந்து போக முடியாது! நானும் கூட வருவேன்; வரத்தான்
வேன். நீ எந்தக் காடு மேடுகளெல்லாம் திரிந்த போதிலும், அந்தக் கஷ்
கனி யெல்லாம் எனக்கும் உரிமை யுண்டு; எனக்கும் பங்கு வேணும்!" எ
மன்றாடி யிருப்பாள் காதலி, காலைப் பிடித்துக் கொண்டே.

இந்தக் கற்பனைக்கு ஆதாரம் கேட்கிறீர்களா? "நல்லது. அதனால்தா
அடுத்த அவதாரமாகிய ராமாவதாரத்திலே, அதே லக்ஷ்மி சீதாலக்ஷ்மியாகிக் க
னோடு காடும் மேடும் அலைந்து திரிந்தாள்; கஷ்டப் பட்டாள்!" எ
எளிதில் பதில் சொல்லி விடுகிறது கற்பனை யுள்ளம்.

மறுபடியும் "இருளின் சக்திகள்" வேலை செய்யத் தொடங்கி விட்
ராக்ஷஸ சக்திகளாகி. மறுபடியும் லோகத்தை ரட்சிக்க, தர்மத்தை
நிறுத்த, வீர ராமன் வந்துவிட்டான், பாற்கடலை விட்டு. ஸஹதர்மிணியும் ஜ
குல சுந்தரியாக வளர்ந்து வருகிறாள் மிதிலை மாநகரிலே, திருமணமும் த
தில் இல்லை. திருமணத் தூதன் தானே விசுவாமித்திரனும்? ராமனுடைய
மனத்திலிருந்து "பழைய நினைவு"களை எழுப்பித் தர்மாவேசம் உண்ட
வதற்குச் சொன்னது தானே மகாபலி கதையும்?

கதை சொல்லி, ஸித்தாச்ரமத்தின் பெருமையையும் ஆரம்பத்திலே சொ
ராமனுள்ளத்தை வசீகரித்து விட்ட முனிவன், "இந்த ஆச்ரமத்திலே
நானும் தவவேள்வி செய்து ஸித்தி பெற விரும்புகிறேன். அதற்குத் தாட
என்ற ஒரு பெரிய இடையூறு ஒழிந்தது. ஆனால் அவளுடைய புத்திரர்க
சுபாகுவும் மாரீசனும் ராட்சஸப் படையோடு வருவார்கள்" என்று ராம
மணனிடம் சொன்னான். வைத்த கண் வாங்காமல் சிறிது நேரம் அவர்க
பார்த்து மகிழ்ந்து, "மைந்தர்களே! காவல் செய்யுங்கள்" என்று கட்
விட்டு யாகம் செய்யத் தொடங்கினான்.

இந்த மைந்தர்கள் அந்த வேள்வியை எப்படிக் காக்கிறார்கள்?

மண்ணினைக் காக்கின்ற
மன்னவன் மைந்தர்கள்,
கண்ணினைக் காக்கின்ற
இமையிற் காத்தனர்.

அவ்வளவு இயற்கையாக, அவ்வளவு பொருத்தமாக, அவ்வளவு ஆ
மாக ரட்சக மூர்த்தியின் ரட்சகத் தொழில் நடைபெறுகிறது.



பி. ஸ்ரீ.

97

35. தர்மாவேசமும் அதர்மாவேசமும்

கண்ணைக் காக்கும் இமை போல், யாகத்தைக் காத்தார்கள் ராம-லட்ச ணர்கள் என்று சொல்வதில் எவ்வளவோ பொருள் பொதிந்திருக்கிறது! ந்தக் கடமையையும் காவலையும் எவ்வளவோ அருமையாகக்—கண்ணாகவே— ருதியவர்கள், தவ வேள்விக்குத் தீங்கு செய்யும் ராக்ஷஸர்களைக் கண்ணிலே ந்து விழக் கூடிய தூசு தும்பாகவே மதித்தார்கள் என்றும் கருதலாம். பண்டி ர்களில் சிலர் இந்த உபமானத்திற்கு வியாக்கியானம் செய்யும்போது மனோ வத்தின் லகானை அப்படியே விட்டு விடுவதுண்டு.

நம்பிக்கைக் குறைவா?

மேலிமை மூத்தவனாகிய ராமன் என்றும், கீழிமை இளையவனாகிய லட்சு ணன் என்றும் கூறி, அசைந்து கொண்டிருக்கும் மேலிமை போல் ராமன் ற்றித் திரிந்து காவல் செய்ததாகவும், கீழிமை போல் லட்சுமணன் அசை து நின்று ஆச்ரம வாசலில் காவல் செய்ததாகவும் ரஸிக்கிறார்கள். இமைக் ம் போதெல்லாம் மேலிமை கீழிமையைத் தீண்டுகிறதல்லவா? அப்படியே னும் வாசல்-பக்கம் வந்த போதெல்லாம் லட்சுமணனைத் தட்டிக் கொடுத்து ச்சரிக்கை செய்தானென்றும் கருதுகிறார்கள். அதிசய வியாக்கியானம்! பூர்வ மூளை!

ஆனால் லட்சுமணன் அப்படி அஜாக்கிரதையாக இருக்கக் கூடியவனா? னுக்கு அவன் மீது அவ்வளவு நம்பிக்கைக் குறைவா? ஒரே இடத்தில் ன்று கொண்டிருப்பதால் தூங்காத லட்சுமணனும் தூங்கி விழக்கூடும் என் ம், அப்படிப்பட்டவனைச் சுற்றித் திரியவிட்டு ராமன் ஏன் வாசலில் நின்று த முக்கியமான காவல் - தொழிலை மேற்கொள்ளலாகாது?

இனி, இத்தகைய வியாக்கியான விநோதங்களை விட்டுக் கவிஞன் என்ன சொல்லிக் கொண்டு போகிறான் என்று பார்க்கலாம் :

காத்தனர் திரிகின்ற
காளை வீரரில்
மூத்தவன், முழுதுணர்
முனியை முன்னி, " நீ
தீத்தொழில் இயற்றுவர்
என்ற தீயவர்,
எத்தருங் குணத்தினாய்!
வருவ(து) என்(று)?" என்றான்.

[காத்தனர் திரிகின்ற — காத்துக் கொண்டு திரிகின்ற. காளை வீரர் — காளை போன்ற வீரர்கள். முழுதுணர் — விஷயம் முழுதும் உணர்ந்த. முன்னி — நோக்கி. இயற்றுவர் — இயற்றுவார்கள். எத்து அருங்குணத்தினாய் — புகழ முடியாத குணங்களை உடையவனே.]

யாகத்தை இமை போலக் காத்து வந்த ராம லட்சுமணர் இருவரும் யாகசாலையைச் சுற்றிச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார்கள் — என்றே கவிஞன் சொல்லுகிறான். அப்படிச் சுற்றி வருகையில் மூத்தவனாகிய ராமன் விசுவாமித்திரன் முன்னே போய் நின்றானாம் திடீரென்று. உடனே விஷயம் முழுதும் உணர்ந்து கொண்டான் முனிவன். ராமன் நின்ற நிலையிலேயே, நோக்கிய நோக்கிலேயே, அந்த ஆத்திரம் பலனாகி விட்டது.

" என்ன ? இன்னும் வரவில்லையே முனிவன் சொன்ன அந்தத் தீயவர் " என்று துடிக்கும் உள்ளத்தை அடக்க முயன்றும் முடியாமல், " நீங்கள் சொன்னீர்களே, தீத்தொழில் இயற்றுவார்களென்று, அந்தத் தீயவர் எப்போது தான் வருவார்களோ ? " என்று கேட்டு விட்டான்.



துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்ய வந்த இந்த இளைஞனுக்குத் தான் என்ன பேராசை! என்ன வீரத் துடிப்பு! அந்தப் பேராசையையும் ஆத்திரத்தையும் எவ்வளவு பொருத்தமாக வெளியிடுகிறது ராமனின் கேள்வி !

முனிவன் என்ன பதில் சொன்னான்

ஊரியுமா ? ஒன்றுமே பதில் சொல்ல வில்லையாம். மௌனியாக இருந்து ட்டானும். என் ? மௌன விரதத்தில் இருந்தான், யாக தீட்சையில் இருந்த ால். அந்த நிலை இப்போது ராமனுக்கு விளங்கி விட்டது. உடனே முனி னைத் தொழுது விலகி வந்து விட்டான், "மௌனம் குலைபலாகாது; விரத ங்கம் வரலாகாது" என்று. பிறகு என்ன செய்தான் ? என்ன நடந்தது ?

அந்தக் காட்சியை யெல்லாம் அப்படியே பாருங்கள் இந்தக் கவிதைக் ண்ணாடியிலே :

வார்த்தைமா(று) உரைத்திலன்
முனிவன் மௌனியாய்ப் ;

யார்த்தொழில்
குமரனும்
த்தொழுது
போந்தபின்,
ார்த்தலன்
விசும்பினைப்
ருவ மேகம்
போல்
ஆர்த்தனர்
இடித்தனர்,
அசனி அஞ்
சவே !

[வார்த்தை மாறு உத்தரம். குமரன் (இங்கே) ராமன். விசும்பினை- ஆகாய தை. பருவமேகம் கொண்ட மேகம் ; கார் காலத் மேகம். ஆர்த் னர் - ஆரவாரம் செய்தார்கள். அசனி-இடி.]

இந்தப் பாட் லே ராமனைப் "போர்த் -தொழில் குமரன்" என்று குறிப்பிடுவதும், ராமனுக்கு தங்ட ாக்கர்களோடு போர் புரிய வேண் ம் என்பதிலுள்ள ஆத்திரத்தையே றப்பாகக் காட்டு றது.



இடியும் இருளும்

முனிவனை விட்டு விலகி வந்ததும் ராமன் ஆகாயத்தைப் பார்க்கிறு தற்செயலாக. ஆஹா, மழை மேகங்களா? என்ன இடி! ஓஹோ, அவ தான் வந்து விட்டார்களா? ஆம், முனிவன் சொன்ன அந்தத் தீயவர். மல சால் - இருட்டல்ல; ராட்சஸ இருள்தான்! ராட்சஸ இடிதான்!

அந்தத் தீயவர்களையும், தீத்தொழில்களையும் கம்பன் காட்டும் ஜாலக் க ளூட வழியாக எவ்வளவு பிரத்யக்ஷமாகப் பார்த்து விடுகிறோம்:

எய்தனர், எறிந்தனர்;
    எரியும் நீருமாய்ப்
பெய்தனர்; பெருவரை
    பிடுங்கி வீசினர்; 112
வைதனர், தெழித்தனர்;
    மழுக்கொண்(டு) ஓச்சினர்;
செய்தனர் ஒன்றல
    தீய மாயமே!

[எரி—நெருப்பு. பெருவரை—பெரிய மலை. தெழித்தனர் — அதட் ஞர்கள். மழுக்கொண்டு ஓச்சினர்—மழு என்ற ஆயுதத்தைக் கொண்டு ஓ ஞர்கள். ஒன்றல—ஒன்று அல்லாத; அதாவது, பலவான.]

அரக்கர்கள் அம்புகளை எய்தார்களாம்; வேல் முதலிய ஆயுதங்களை எ ஞர்களாம்; மலைகளையும் பிடுங்கி வீசினார்களாம். நெருப்பும் நீருமா சொரிந்தார்களாம். கோபம் அடங்காமல் வைதார்களாம், அதட்டினார்கள ஒன்றல்ல; பலவான தீய மாயச் செயல்களைச் செய்தார்களாம். கொஞ் நேரத்திலே "பூத மழையல்லவா பெய்கிறது?" என்று சொல்லும்படி, ர மழையிலே அந்தக் காட்டின் பகுதி மறைந்து விட்டதாம். அலைகடல் எழு ஆகாயத்தை மறைத்து விட்டது என்று சொல்லும்படி பொங்கி விட்ட நாற்புறமும் வளைத்து கொண்ட ராக்ஷஸ சேனை.

அந்த அரக்கர்களை ராமன் லட்சுமணனுக்குக் காட்டினான், "முனிவ சொன்ன ஆசாமிகள் அதோ!" என்று:

"கவருடை எயிற்றினர்,
    கடித்த வாயினர்,
துவர்நிறப் பங்கியர்,
    சுழல்கண் தீயினர், 113
பவர்சடை அந்தணன்
    பணித்த தீயவர்
இவர்" என இலக்குவற்(கு)
    இராமன் காட்டினான்.

[கவர் — பிளவு; கவர்தல். எயிற்றினர் — கோரப் பற்களை உடைய
துவர் நிறம் — சிவந்த நிறம். பங்கியர் — ரோமத்தை உடையவர்கள். சு
கண் — சுழல்கின்ற கண்கள். பவர் சடை — நெருங்கிய சடை. அந்தண
— (இங்கே) விச்வாமித்திர முனிவன். நிலக்குவன் — லட்சமணன்.]

அந்தப் பிளவுபட்ட கோரப்பற்களேயும் செம்பட்ட மயிரையும் பார்த்தத
"பிறரைத் தின்று பிழைக்கும் ஆசாமிகள்" என்று தெரிந்து விட்டா
மடித்துக் கடித்த உதட்டையும் வாயையும், உருட்டி விழிக்கும் சிவந்த கண்க
ளையும் கண்டு, "அந்த நர மாம்ச பக்ஷணிகளின் அதர்ம ஆவேசம் தான் என்
இந்த யாகத்தின் மீதும், முனிவர்கள் மீதும் என்ன பெருங் கோபம்!" என்
ஆச்சரியமாகக் காட்டினானும் ராமன்.

நெருப்புப் பொறிகளைக் கக்கிய அந்த ராக்ஷஸர்களின் கோபாவேசக் க
களைப் பார்த்ததும் லட்சமணன் கண்களிலும் நெருப்புப் பொறி பறந்தது. அ
போது அவன் என்ன செய்தான்? என்ன சொன்னான்?

கண்டஅக் குமரனும்
கடைக்கண் தீஉக,
விண்ணினை நோக்கித்தன்
வில்லை நோக்கினன்;
"அண்டர்நா யக! இனிக் 114
காண்டி, ஈண்(டு)அவர்
துண்டப்விழ் வன!" எனத்
தொழுது சொல்லினன்.

[உக — சிதற. விண் — ஆகாயம். அண்டர் நாயக — தேவர் தலைவனே
(இங்கே) ராமனைக் குறிப்பது. காண்டி — காண்பாயாக. ஈண்டு — இ
விடத்திலே.]

விண்ணையும் நோக்கினான். வில்லையும் நோக்கினான். பிறகு அண்ணனை
நோக்கினான். அவ்வளவு தான். "இனி ஒட்டை உடைசல் இல்லாம
அந்த முழு மக்களைப் பார்க்க முடியாது!" என்று சொல்லி விட்டா
என்ன தர்மாவேசம், லட்சமணனுக்குத் தான்!



பி. ஸ்ரீ.

36. யாக ரட்சணம்

"அண்ணா! இப்போதே துண்டம் துண்டமாகச் சாய்ப்பாய் அந்த
ாமிகளை இந்த நிலத்திலே!" என்று லட்சுமணன் அரக்கர்கள் இருந்த
ண்ணை நோக்கி, வில்லை நோக்கித் தன்னை நோக்கிச் சொன்னதும், ராமன்
ோனே விச்வாமித்திரனுடைய அந்த வேள்விச் சாலையைப் 'பந்தோபஸ்து'
ய்ய விரும்பினான், மாமிசத் துண்டுகளும் இரத்தமும் ஹோம அக்கினியிலே
ர்ந்து விழாதபடி, — அவர்கள் செத்தும் கெடுத்தார்கள் யாகத்தை என்று.
டாதபடி.

சரகூடமும் அபய ஹஸ்தமும்

அதற்காக என்ன செய்தான்? வேள்விச் சாலையைச் சுற்றிப் பந்தல்
ட்டது போல் ஒரு கூடம் அமைக்கத் தொடங்கினான். நல்லது: அதற்குச்
ன்? கையிலோ வில்லும் அம்பும் தான்! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
பார்கள். ராமனோ தன் ஆயுதங்களாகிய அம்புகளைக் கொண்டே எங்கும்
ா புல்லுப் பந்தல் வேய்ந்து விட்டானாம் :

தூமவேல் அரக்கர்தம்
நிணமும் சோரியும்
ஓமவெங் கனலிடை
உகும்என்(று) உன்னி, அத்
தாமரைக் கண்ணனும்
சரங்க ளேகொடு
கோமுனி இருக்கைஓர்
கூடம் ஆக்கினான்.

[தூமம்—புகை. நிணம் — மாமிசம். சோரி — இரத்தம். உகும் —
ம். உன்னி—நினைத்து. சரங்கள்—அம்புகள், பாணங்கள். கொடு —
ண்டு. கோமுனி—ராஜ ரிஷியாகிய விச்வாமித்திரன்.]

அம்புகளை இடை விடாமல் தொடுத்துத் தொடுத்து, மேலே மேலே பின்
பின்னலாகத் தொடுத்து, அந்த அம்புக் கூட்டங்களின் நெருக்கத்தின

லேயே அந்த வேள்விச் சாலையை மறைத்துப் பாதுகாக்கும் ஒரு கூடம் போ
செய்து விட்டானும் ராமன். இதைச் சர கூடம் என்று சொல்வதுண்டு.
முனிவர்களோ அரக்கர்களைக் கண்டதும் நடுங்கி ராமனை அபயம் வேண்
கிறார்கள் :

நஞ்(சு)அட எழுதலும்
நடுங்கி நாள்மதிச்
செஞ்சடைக் கடவுளை
அடையும் தேவர்போல்,
வஞ்சனை அரக்கரை
வெருவி மாதவர்,
"அஞ்சன வண்ணா! நின்
அபயம்யாம்" என்றார் 116

[அட—கொல்ல. நாள்மதி—புதிய இளஞ்சந்திரன். வெருவி—பய
மாதவர் — பெருந்தவமுள்ள முனிவர்கள். அஞ்சன வண்ண — அஞ்ச
போன்ற திருநிறம் வாய்ந்த ராமனே.]

அமிர்தத்திற்கு ஆசைப்பட்டுப் பாற்கடல் கடையும்போது 'கிணறு வெ
டப் பூதம் புறப்பட்டது' போல் கொடிய விஷம் தோன்றியதும், தேவ
எல்லாம் நடுங்கிச் சிவபெருமானைச் சரண மடைந்தார்க ளல்லவா? அப்படி
கரிய கொடிய விஷம் போன்ற வஞ்சனை நிறைந்த அரக்கர்களைக் கண்ட
நடுங்கிப் போன முனிவர்களும் ராமனைச் சரண மடைந்தார்களாம். க
னுடைய சைவ வைஷ்ணவ சமரஸ உணர்ச்சிக்கு இந்த உபமானமும்
சாட்சி.

வேகமும் கோரமும் தெய்வ ஸங்கல்பமும்

அந்த முனிவர்களுக்கு ராமன் அபயம் அளித்துக் கொண்டே வில் நா
டம் ('சொல்முன்னே, செயல் பின்னே' என்று ஆகி விடாமல்) இழுத்
செவிப்புறம் நிறுத்துவதும், அம்புகளைச் சோனமாரியாகப் பொழிந்து ராக
வதம் செய்வதும் எல்லா படு வேகமாக நடைபெறுகின்றன !

கவித்தனன் கரதலம்
"கலங்கல் நீர்!" எனச்
செவித்தலம் நிறுத்தினன்
சிலையின் தெய்வநாண் :
புவித்தலம் குருதியின்
புணரி ஆக்கினன் ; 117
குவித்தனன் அரக்கர்தம்
சிரத்தின் குன்றமே !

[கவித்தனன் — அபயம் கொடுப்பதுபோல் கை அமர்த்திக் காட்டின
கலங்கல் — கலங்க வேண்டாம். செவித்தலம்—செவியின் இடம். சிலை
வில். புவி—பூமி. குருதி—இரத்தம். புணரி—சமுத்திரம்.]

"செவித்தலம் நிறுத்தி"ய கோதண்டத்தின் "தெய்வ நாண்" எத்த
பாணங்களை உதைத்துத் தள்ளி யிருக்க வேண்டும், அந்த ராம பாண
எத்தனை ராட்சஸர்களை வதைத்துத் தள்ளி யிருக்க வேண்டும்!—என்றெல
சொல்லாமலே, "அந்த நிலப்பகுதி கடலும் குன்றும் ஆகி விட்டது!" எ
சொல்வதிலேதான் என்ன சொற்செட்டு!

புவித்தலம் குருதியின்
புணரி ஆக்கினன், 118
குவித்தனன் அரக்கர்தம்
சிரத்தின் குன்றமே !

— ஆஹா, என்ன கொடுமையான ... ...
திரங்களையும் கூட மறைக்கின்றன யுத்த கோரங்கள்! எனினும் இரத்தக் ...லுக்கும் சிரக் குன்றுகளுக்கும் இடையே தோன்றும். அந்தத் "தெய்வ ...ண்" தெய்வ வீரனை எடுத்துக் காட்டுகிறது. ஆம்; "இதோ பாருங்கள், மாவேசக்தியின் சொரூபத்தை — பரம் பொருளின் அதிகார முத்திரை தரித்த ...த பரம புருஷனை!" என்று.

இத்தகைய உணர்ச்சிகளை உறுதிப் படுத்தும் தோரணையிலே தொடங்கு ...றது அடுத்த பாட்டும் :

> திருமகள் நாயகன்
> தெய்வ வாளிதான்,
> வெருவரு தாடகை
> பயந்த வீரர்கள்
> இருவரின், ஒருவனைக்
> கடலில் இட்ட(து), அங்(கு)
> ஒருவனை அந்தகன்
> புரத்தின் உய்த்ததே!

119 ...
101

[திருமகள் நாயகன்—(இங்கே) ஸ்ரீராமன். வாளி—அஸ்திரம். வெரு ...ரு — (யாவரும்) பயப்படக் கூடிய. பயந்த—பெற்ற. அந்தகன் புரம்—யம லோகம். உய்த்தது—கொண்டு சேர்த்தது.]

"தெய்வ காண்" என்று குறித்ததும் போதாது என்று கருதியதுபோல் "தெய்வ வாளி" என்று ராம பாணத்தையும் குறிப்பிட்டு இந்தத் துஷ்ட நிக்ரகச் செயல்களிலே மறைந்திருக்கும் தெய்வ ஸங்கல்பத்தை வற்புறுத்து கிறான் கவிஞன்.

இங்கே ராமனைத் "திருமகள் நாயகன்" என்றது தெய்வத் தன்மையை மேலும் வற்புறுத்துவதற்காக அல்ல. "ஜயலக்ஷ்மியோடு கூடிய ராமன்" என்று இப்போது அடைந்திருக்கும் வெற்றியைக் குறிப்பதற்காக மட்டும் அல்ல. சீதாலட்சுமியைக் கல்யாணம் செய்து கொள்ளத்தானே போகிறான், திருமணத் தூதனாக வந்த முனிவனோடு? அந்த யாத்திரை - வழியிலே மைல் - கற்களைப்போல் அமையும் நிகழ்ச்சிகள்தான் இந்த அரக்கர்களின் வதமும், அந்தத் தாடகை வதமும் கூட. இவை சீதாகல்யாணத்தைத் துரிதப் படுத்து கின்றன; அந்தக் கல்யாணமோ ராமாயணத்தின் தனிப் பெரு நிகழ்ச்சியான ராவண வதத்தையே துரிதப் படுத்தி, தெய்வ ஸங்கல்பத்தைப் பூர்த்தி செய்யப் போகிறது. இவ்வளவையும் ஒரு சங்கிலித் தொடர்போல நினைப்பூட்டுகிறது "திருமகள் நாயகன்" என்ற சொற்றொடர்.

இந்த அரக்கர் கூட்டத்தின் தலைவர்கள், ராவணன் பாட்டியாகிய தாடகை யின் புதல்வர்களான மாரீசனும் சுபாகுவும். இவர்களில் மாரீசனை ராம பாணம் கடலில் கொண்டுபோய்ப் போட்டு விட்டது; மற்றவனையோ யமபுரத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டதாம்.

விண்ணும் மண்ணும் இயற்கையும் வாழ்த்தின!

யுத்த சமயத்திலே ராமன் வேள்விச் சாலைக்கு அம்புப் பந்தல் போட்டது போல், இப்போது பிணக் குன்றுகளுக்கும் இரத்தக் கடலுக்கும் மேலே ஒரு பந்தல் போட்டு விட்டனவாம் பிணம் தின்ன வந்த கழுகு முதலிய பறவைக ளெல்லாம். அந்தப் பறவைப் பந்தலைக் கிழித்துக் கொண்டு இறங்கியதாம்

ராமன் மீது தேவர்களின் பூமழை. அவ்வளவு மிகுதியாக அள்ளி அள்ளி சொரிந்து கொண்டே யிருந்தார்களாம் பூக்களை.

பந்தரைக் கிழித்தது
பரந்த பூமழை;
அந்தர துந்துமி
அலையின் ஆர்த்தன;
இந்திரன் முதலிய
அமரர் ஈண்டினர், 120
சுந்தர வில்லியைத்
தொழுது வாழ்த்தினர்.

[பரந்த — பரவிய. அந்தர துந்துமி — ஆகாயத்திலே தேவர்கள் முழக்கும் பேரிகை. அலையின் — கடல் அலைகள் போல். ஆர்த்தன — ஆரவாரம் செய்தன. அமரர் — தேவர்கள். ஈண்டினர் — திரண்டு நெருங்கி வந்தார்கள். சுந்தர வில்லி — அழகிய கோதண்டத்தையுடைய ராமன்.]

தேவர்கள் பூமழை பொழிந்து ஜயபேரிகை கொட்டினார்களாம். அந்த முழக்கம் அலை அலையாகக் கோஷித்து வந்ததாம், ஆகாயத்திலிருந்து பூமிக்கு. பூ மழைக்கும் ஜயகோஷங்களுக்கும் இந்திராதி தேவர்களின் வாழ்த்து வணக்கங்களுக்கும் இடையே "சுந்தர வில்லி" யாகத் தோன்றிய ராமனை நமக்கு காட்டுகிறான் கவிஞன்.

"செவித்தலம் நிறுத்தினன் சிலையின் தெய்வ நாண்" என்று வர்ணித்த சிலையில் பயங்கரமான பாணங்களை உதைத்துத் தள்ளிய கோதண்டம், போர் முடிந்ததும், "பரமசாது" வாகி, ராமன் கையில் இப்போது அழகாகவும் தோன்றுகிறதாம். ஆபத்தமாகக் கூடத் தோன்றவில்லையாம். ராமனுடைய சுந்தரமான கைக்கு ஒரு சுந்தரமான ஆபரணம் போலத் தோன்றுகிறதாம்.

தேவர்களோடு முனிவர்களும் மகிழ்ந்து போனார்கள். அந்தப் பூ மழையோடு இவர்களும் பூ மழை பொழிந்தார்களாம். ஆசி மொழிகள் என்ற பூ மழைதான். இயற்கையும் இந்தக் குதூகலத்தில் பங்கு கொண்டதாம். ஆம், காட்டில் உள்ள பூ மரங்கள், காற்றினால் உதிர்க்கப்பட்ட பூக்களைப் பூமாரியாகப் பொழிந்து மகிழ்ந்தனவாம். இந்த பூமழைகளுக்கிடையே விச்வாமித்திரன் வேள்வியை முடித்துக்கொண்டு ராமனுக்கு உபசார வார்த்தைகளைச் சொன்னான்.

புனித மாதவர் ஆசியின்
பூமழை பொழிந்தார்;
அனைய கானத்து மரங்களும்
அலர்மழை சொரிந்த; 121
முனியும் அவ்வழி வேள்வியை
முறைமையின் முற்றி,
இனிய சிந்தையன் இராமனுக்(கு)
இனையன இசைத்தான்.

[புனித — பரிசுத்தமான. மாதவர் — மகரிஷிகள். அனைய கானத்து — அந்தக் காட்டிலுள்ள. அலர் மழை — மலர் மழை. சொரிந்த — சொரிந்தன. அவ்வழி — அப்பொழுது. முறைமையின் — முறைப்படியே. முற்றி — முற்றப்பெறச் செய்து. இனையன — இத்தன்மையன ஆன.]

வேள்வி இனிது நிறைவேறியதால் விச்வாமித்திரன் உள்ளம் குளிர்ந்து போயிற்று. அந்த இனிய சிந்தையிலிருந்து பிறக்கும் உபசாரமும் எவ்வளவோ குளிர்ச்சியாகப் பூமழை பொழிவது போலவே இருக்கவேண்டு மல்லவா? மதுரமான இன்னிசை மழைபோலவும் இருந்தது அந்தப்பேச்சு—என்றும் ரஸித்துக் கொள்ளலாம், "இனிய சிந்தையன்......இசைத்தான்" என்று கூறவதிலிருந்து.



பி. ஸ்ரீ.

37. அமிர்தம் கடைந்தது

(விச்வாமித்திரன் சொன்ன கதை)

"ஆஹா, என்ன பாக்கியம் பண்ணினேன்!" என்று பேசத் தொடங் ...ன் முனிவன் ராமனை நோக்கி. "இதுவும் உனக்கு ஒரு பொருளா?" ...ரான். "என்ன உபசார வார்த்தை! விச்வாமித்திர மஹரிஷி யல்லவா ...கிறவர்?" என்று எண்ணுவதற்குள்ளே மேலும் பேசினான் தொடர்ந்து. "'எல்லா உலகங்களையும் ஆக்கி, வயிற்றிலும் வைத்து ரக்ஷிக்கும் நீயோ ...ரக்ஷணம் செய்தாய்! இதுவும் உனக்கு ஒரு பொருளா, ஒரு பெருமையா?" ...ன மஹரிஷி சொல்லி முடித்ததும், அது ஒன்றும் புரியாதது போல் ராமன் ... இருந்து விட்டான். எனினும் ஒரு சக்தி-விதை விழுந்து விட்டது உள் ...த்திலே. துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலன ஆசையும் ஜொலிக்கத் ...ங்கி யிருக்க வேண்டும் யாகத் தீயைப் போலே, விச்வாமித்திரனுடைய ...ார வார்த்தையின் பயனாக. ஸித்தாச்ரமத்திலே அன்றைத் தினம் கழிந்தது ...ிஷிகளுடனும்.

"பெரிய காரியம்"

மறு நாள் காலையிலே ராமன் விச்வாமித்திரனைத் தொழுது நின்று, ...ன்றைக்கு அடியேன் செய்ய வேண்டிய பணி யாதோ? நியமித்தருள ...ும்" என்று வினவினான் வெகு வினயமாக. அதற்கு விச்வாமித்திரன்,

"அரிய யான்சொலின், ஐய! நிற்(கு)
அரியதொன்(று) இல்லை;
பெரிய காரியம் உள,அவை
முடிப்பது பின்னர்;
விரியும் வார்புனல் மருதம்சூழ்
மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியும் காண்டும்நாம்;
எழுக"ென்று போனார்.

[அரிய—அரியன ; அருமையானவை. சொலின—சொன்னால். உனக்கு. வார்—நீண்ட ; மிகுந்த. புனல்—நீர். மருதம்—வயல்கள். மிதிலைக் கோமான்—மிதிலா நகர மக்களின் அரசனாகிய ஜனகன். காண்டும்—காண்போம். எழுகென்று—எழுக என்று ; புறப்படுவாயாக என்று சொல்ல.]

“ அரிய காரியங்கள் என்று நான் சில காரியங்களைக் குறிப்பிட்டு சொன்ன போதிலும், ராமா ! உனக்கு அரியது என்பதும் உண்டா ?” என் பதில் சொல்லும் முனிவன், ராமன் செய்யத் தக்க காரியங்களும் உண்டு எ பதை ஞாபகப் படுத்துகிறான். ஆனால், “ அவை முடிப்பது பின்னர் ” என் குறிப்பாகச் சொல்லிவிட்டு, “ இப்போது அடுத்த படியாக என்ன செய்ய வே டும் ?” என்பதை உடனே சொல்லுகிறான்.


“ ராவண வதம் ” என்ற அந்தத் தனிப் பெருங் காரியத்திற்கு இன் யமையாத சீதா கல்யாணத்தை அடுத்த படியாகக் குறிப்பிட்ட போதிலும், இன் யும் குறிப்பாகவே — மூடுமந்திரமாகவே—சொல்லுகிறான். இந்த வேள்வி விருந்து அந்த வேள்விக்குப் போகலாம் என்றுதான் சொல்லுகிறான். வி தாச்ரம வேள்வியிலிருந்து மிதிலையில் ஜனகன் நடத்தும் வேள்வி காணப் போ லாம் என்கிறான். கல்யாணம் என்ற மண வேள்வியை இப்போது ராமனுக்குத் தெரிய வேண்டாமென்று மறைத்து விடுகிறான்.



அந்த மிதிலையைத்தான் எவ்வளவு வசீகரமாக, “ விரி யும் வார்புனல் மருதம்சூழ் மிதிலை” என்று அந்த நீர்வள நிலவளங் களைச் சுருக்கச் சொல்லி வர்ணிக் கிறான் ! “அங்கே நடக்கும் யாகத்தை யும் போய்ப் பார்ப்போம்” என்று சொல்லிப் “புறப்படு” என்று துரிதப் படுத்துகிறான். இந்த “எழுக” என்ற சிறு வார்த்தையிலேயே, அந்தக் கல் யாணவிஷயமாக விச்வாமித்திரனுக்கு உள்ள ஆத்திரத்தை எவ்வளவு நன் றாக மறைத்துக் காட்டுகிறான் கவி ஞன் !

கதை ஆரம்பிக்கிறது வைகுண்டத்திலே !

முனிவன் ராம லட்சமணர்களை அழைத்துக்கொண்டு சோணை என்ற ஆற்றின் கரைக்கு வந்ததும் சூரி யாஸ்தமனம் ஆகி விட்டது. அன் றிரவு மூவரும் அந்த ஆற்றங் கரை யிலே ஒரு சோலையில் தங்கினார்கள். “ இந்தச் சோலையில் ஏதாவது விசே ஷம் உண்டா ? ” என்று ராமன் கேட்டான். அதற்கு விச்வாமித்தி



ரன்; "இங்கே காசியப மஹரிஷியின் மனைவியாகிய திதி என்பவள் தவம் செய்தாள். அவளுடைய புத்திரர்களான அசுரர்கள் அமிர்தம் உண்ட தேவர்களை ஜயிக்க முடியாமல் மாண்டு போனார்கள். அந்தப் புத்திர சோகத்திற்குப் பின்புதான் இங்கே அந்த அம்மாள் தவம் செய்யத் தொடங்கினாள்" என்ற பீடிகையுடன் அமிர்தம் கடைந்த கதையைச் சொல்லத் தொடங்கினான். ராம லட்சுமணர்கள் ஆவலாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"யாவர்க்கும் தாயாகிய அழகுத் தெய்வம் வைகுண்ட லோகத்திலே தன் பரிபூர்ண ஸௌந்தர்யத்துடன் மகாலக்ஷ்மியாக வீற்றிருக்கிறாளல்லவா? ஒரு வித்யாதரப் பெண் ஒரு சமயம் யாழ்கொண்டு இசை பாடிப் புகழ்ந்ததும், அந்த அழகுத் தேவி உத்ஸாகமாய்த் தனது பூமாலை ஒன்றைக் கூந்தலிலிருந்து வெகுமானமாய்க் கொடுத்தாள். அந்த மாலையை அவள் தன் யாழியிலே கட்டிக்கொண்டு குதூகலமாய் அந்த விஷ்ணு லோகத்திலிருந்து பிரம லோகத்திற்கு வந்தாள். வழியில் ஸாக்ஷாத் துர்வாஸ மஹரிஷியை — கோபத்திற்கும் சாபத்திற்கும் பேர் போன அந்த முனிவரையே — சந்தித்து விட்டாள்" என்று முனிவர் சொன்னதும், ராம லட்சுமணர்களுக்கு "அப்புறம் என்ன நடந்தது?" என்று தெரிந்து கொள்ள எவ்வளவு ஆவலாக இருக்கும்! அந்தக் கொடிய முனிவர் அவளையும் கோபித்துக் கொள்ளப் போகிறாரோ?

யாழும் கையுமாக அக் கன்னிகையைக் கண்டதும் ஆறாத கோ
களும் ஆறிப் போய் விட்டன தூர்வாஸருக்கு !

என்னை ஆளுடை நாயகிக்(கு)
இசைஎடுப் பவள்என்(று),

அவள் அடிகளை வணங்கித் துதித்து நின்றார் முனிவர். அந்த முனிவர் அப்
நின்றதும் அவளுக்குக் குதூகலம் அதிகரித்து விட்டது.

"உலகம் யாவையும் படைத்(து)அளித்(து)
உண்(டு)உமிழ் ஒருவன்
இலகு மார்பகத் திருந்(து),உயிர்
யாவையும் ஈன்ற
திலக வாள்நுதல் சென்னியில் 123
சூடிய தெரியல்,
அலகில் மாமுனி ! பெறுகே"ன
அளித்தனள் அளியால்.

[இலகு — இலங்குகிற ; விளங்குகிற. திலகவாள்நுதல் — திலகத்
கூடிய பிரகாசமான நெற்றி யுடைய திருமகள். சென்னி —
தெரியல் — மாலை. அலகில் — (பெருமைக்கு) அளவில்லாத. அளியால்
அன்போடு ; கிருபையுடன்.]

"ஸர்வேச்வரனுடைய மார்பிலே இருந்து உயிர்களை எல்லாம் ஈன்றெ
தாயாகிய அழகுத் தெய்வம் முடியிலே சூட்டி யிருந்த மாலை இது !" எ
வித்யாதரப் பெண் சொல்லிக் கொடுத்ததும் தூர்வாஸருக்கும் உத்ஸாகம் பி
விட்டது பிரமாதமாக.

"தெய்வ நாயகி சென்னியிற்
சூடிய தெரியல்,
ஐய ! யான்பெறப் புரிந்த(து)எத்
தவம் ?"என ஆடி
வெய்ய மாமுனி, சென்னியில் 124
சூடியே விண்போய்
உய்யும் ஆ(று) இ(து) !" என்று உவந்துவந்து
உம்பர்நா(டு) அடைந்தான்.

[ஐய — (இங்கே) ஆச்சரியம். வெய்ய — கொடிய. ஆறு — விதம். உ
நாடு — தேவலோகம்.]

இப்படி ஆடிக்கொண்டு போன தூர்வாஸ மஹரிஷிக்கு எதிரே இவ
வியக்கும்படி அந்த ஸ்வர்க்க லோகத்திலே தேவேந்திரன் பவனி வந்தான் ஐ
தத்தின் மேல் ஏறி. பவனியின் சிறப்பை ராம லட்சுமணர்கள் வியந்து
கும்படி வர்ணிக்கிறான் விச்வாமித்திரன்.

தேவ ராஜாவின் ஊர்வலம்

மழை பெய்யப் போகும் மேகம் ஒன்று வெள்ளி மலைமேல் வரு
போல் அந்த வெள்ளை யானை மேல் வந்தானும். அந்த இந்திரனுடைய கண்

ஆயிரமும் ஆயிரம் தாமரை மலர்கள் போல் மலர்ந்திருந்தனவாம். தேக காந்தியும் கிரீடம் முதலிய ஆபரண காந்திகளும் சூரிய கிரணங்களைப் போல் ஒளி வீசினவாம்.

பெய்யு மாமுகில் வெள்ளியம்
பிறங்கல்மேல், பிறழும்
செய்ய தாமரை ஆயிரம்
மலர்ந்து,செங் கதிரின்
மொய்ய சோதியை மிலைச்சிய
முறைமைபோன் (று) ஒளிரும்
மெய்யி னோ(டு) அயி ராவதக்
களிற்றின்மேல் விளங்க,— 125

[முகில் — மேகம். பிறங்கல் — மலை. பிறழும் — விளங்குகிற. செய்ய — சிவந்த. மொய்ய — அடர்த்தியான. மிலைச்சிய — மேற்கொண்ட. மெய் — உடம்பு. களிறு — யானை.]

— இந்திரன் பவனி வருவதைக் கண் முன்னே காட்டுவது போல் விச்வாமித்திரன் வர்ணித்துக் கொண்டே போனான்.

தேவ ரம்பை முதலான தெய்வப் பெண்கள் வீதி நெருங்க ஆடிக்கொண்டும் பாடிக் கொண்டும் அந்தப் பவனியை அழகு செய்து வந்த அதிசயத்தையும் ஒரு சப்த சித்திரமாகக் காட்டினான் விச்வாமித்திரன் :

அரம்பை மேனகை திலோத்தமை
உருப்பசி, அனங்கன்
சரம்பெய் தூணியின் தளிரடி
நூபுரம் தழைப்ப,
கரும்பை யும்சுவை கைப்பித்த
குதலையர், விளரி
நரம்பு பாடலோ(டு) ஆடினர்
வீதிகள் நெருங்க. 126

[உருப்பசி - ஊர்வசி. அனங்கன் - மன்மதன். சரம் - அம்பு; (இங்கே) அம்பு. தூணியின் - அம்பறாத் தூணி போன்ற. நூபுரம் - சிலம்பு. தழைப்ப - ஒலி மிகும்படி. குதலை - மழலைச் சொல். விளரி - ஒரு வகையான இசை.]

இப்படி யெல்லாம் பவனி வரும் தேவேந்திரனுடைய ஆடம்பர வைபவங்களைக் கண் முன் கொண்டு வரும்போதே, எதிரே பைத்தியம் பிடித்தவர்போல் ஆடிக் கொண்டே வரும் துர்வாஸரையும் ராம லட்சுமணர்கள் மனக் கண் முன் தெளிவாய்ப் பார்த்துக் கொண்டே யிருக்கிறார்கள்.

பவனியை வியந்து நோக்கிய அந்த முனிவர் இந்தப் படாடோபங்களைப் பார்த்து அப்படியே பிரமித்துப் போகிறாரா? யானை மேல் இருக்கும் தேவராஜா, எதிரே தெய்வப் பெண்களின் நடனத்தைப் பரிகசிப்பது போல் ஆடி ஆடி நடந்து வரும் முனிவரை மரியாதை செய்யப் போகிறானா? இனி என்ன நடக்கப் போகிறது ?—என்றெல்லாம் ராம லட்சுமணர்களின் உள்ளம் எதிர்பார்த்து மேலே மேலே கதை கேட்பதில் முனைந்திருக்குமல்லவா ?



பி. ஸ்ரீ.

38. துர்வாஸ கோபம்

"வீதி நெருங்க ஆடல் பாடல்களோடு வெள்ளை யானைமேல் நீல மேகம் போல் தேவேந்திரன் பவனி வருவதை வியந்து நோக்கிக் கொண்டே நெருங்கி வருகிறார் துர்வாஸ முனிவர்" — என்று விச்வாமித்திர முனிவன் தொடங்கினான் கதையை.

இந்திர பவனியும் முனிவர் வியப்பும்

இப்போது நீல மேகம் நீல மலைபோலத் தோன்றுகிறது. நீல மலையின் இரு புறமும் நிலாச் சுடர் தொகுதியாக விழுவதுபோல் வெண்சாமரங்கள் புரளுகின்றன. அப்படி வெண்ணிலாப் பொழியும் பூர்ண சந்திரனே — காந்தியிலும் அழகிலும் ஒருங்கே பூர்ணமாகி — ஒப்பற்ற வெள்ளிக் குடையாக அமைந்து விட்டது என்று சொல்லும்படி விளங்குகிறதாம், சந்திர வட்டக் குடை முடிமீது.

நீல மால்வரை தவழ்தரு
    கதிர் நிலாக் கற்றை
போல வேஇரு புடையினும்
    சாமரை புரளக்,
கோல மாமதி குறைவற
    நிறைந்(து)ஒளி குலாவ
மேல்இ வர்ந்தென வெள்ளியந்
    தனிக்குடை விளங்க,—

[மால் வரை — பெரிய மலை. தவழ்தரு — தவழ்கிற. கற்றை — தொகுதி. புடையினும் — பக்கங்களிலும். கோலம் — அழகு. மாமதி — சிறந்த சந்திரன். குலாவ — விளங்க. இவர்ந்தென — ஏறியிருந்தாற்போல. வெள்ளியந் தனிக்குடை — அழகிய ஒப்பற்ற குடை.]

வந்து கொண்டிருந்த இந்திரனுக்குப் பக்கத்திலேயே வந்து விட்டார் துர்வாஸர்.

பேரிகை முதலான வாத்திய கோஷங்களும், சங்குகள், தாளங்கள் மு...
வான கோஷங்களும், பெண்கள் பாடும் வாய்ப்பாட்டாகிய மங்கள கீதங்களு...
பிரமாதப்படுகின்றன. முனிவர்களின் வேத கோஷமே சமுத்திர கோஷ...
போல் இருக்கிறதாம்.

தழங்கு பேரியும் குறட்டொடு
    பாண்டிலும் சங்கும்
வழங்கு கம்பலை, மங்கல
    கீதத்தை மறைப்ப,
முழங்கு நான்மறை மூரிநீர்
    முழக்கென, உலகை
விழுங்கு மாவரும் விழாஅணி
    கண்(டு) உளம் வியந்தான். 128

[தழங்கு — ஒலிக்கிற. பேரி — பேரிகை. குறடு — ஒரு வகை வா...
தியம். பாண்டில் — கைத்தாளம். கம்பலை — ஓசை. மூரிநீர் — பழமை...
யான கடல். விழுங்குமா — விழுங்குமாறு. விழா அணி — விழாவி...
அழகு.]

உலகத்தை விழுங்குவதுபோல் வருகின்ற விழாவின் அழகு துர்வா...
ரையே ஆச்சரியமடையச் செய்கிறது. ஆனால் இந்தப் பாட்டிலே வாத்தி...
கோஷங்களும் தாள ஒலிகளும், பெண்களின் மங்கள வாழ்த்துப் பாட்டை...
மறைத்து விட்டன என்று வருவது மேலே வருகிற தீங்குக்கு ஒரு முற்கு...
போலத் தொனிக்கிறதல்லவா ?

வியப்பு, மகிழ்ச்சி, செருக்கு

துர்வாசருடைய வியப்பு விரைவில் மகிழ்ச்சியாகி விட்டது. அ...
மகிழ்ச்சியில் வெள்ளை யானைக்குப் பக்கத்திலே வந்து நின்று கொண்டு தமக்கு...
அருமையாகக் கிடைத்திருந்த அந்தப் பூமாலையை நீட்டுகிறார் இந்திரன் கை...
புறமாக. ஆனால் அப்படி யானைமேல் வருகிறவனுக்கு, கீழே வந்து இப்படி...
நிற்கிறவரை மதிக்கத் தோன்றுமா ?

என்ன நடக்கிறது, பாருங்கள் ;

தனை ஒ வாதவன் மகிழ்ச்சியால்
    வாசவன் தன்கை,
வனையும் மாலையை நீட்டலும்,
    தோட்டியால் வாங்கித்
துனைவ எத்(து)அயி ராவதத்(து)
    எருத்திடைத் தொடுத்தான்;
பனைசெய் கையினால் பறித்(து)அடிப்
    படுத்த(து)அப் பகடு. 129

[ஒவாதவன்—ஒவ்வாதவன் ; (இங்கே) துர்வாசர். வாசவன்—இந்திரன்...
வனையும் — (தான்) தரித்திருக்கும். தோட்டி — அங்குசம். துனை —...
விரைந்து செல்லுகிற. வலத்த — பலத்தையுடைய. எருத்திடை — பிடரி...
யிலே. பனைசெய் கை — பனைமரத்தை ஒத்த தும்பிக்கை. அடிப்படுத்தது —...
காலடியின் கீழ் போட்டுத் தேய்த்தது. பகடு — யானை.]

தாம் தரித்திருந்த அந்த மாலையைத் துர்வாசர் நீட்டியதும், தேவேந்திரன்...
அதைத் தன் கையால் வாங்குவதுகூடக் கௌரவக் குறைவு என்று நினைத்...

டுகிறான் ! அப்படியே அங்குசத்தால் வாங்குகிறான். அப்படி வாங்கியும் தான் ணிந்து கொண்டானா ? இல்லை ; யானையின் பிடரியிலே சூட்டி வைத்தான், ந்த அங்குசத்தைக் கொண்டே. உடனே அது பனைமரம் போன்ற தன் துதிக் கையினால் அந்த மாலையைப் பறித்து அடியில் இட்டுத் துவைத்துத் தேய்த்து ட்டது.

துர்வாஸ எரிமலை

இதைக் கண்டதும் துர்வாஸருக்கு எப்படி இருந்திருக்கும் ? அந்தத் ர்வாஸ கோபத்தை, 'விச்வாமித்திர கோபம்' என்று சொல்லுகிறோமே அத் கைய விச்வாமித்திரனே வர்ணிக்கிறான் :

கண்ட மாமுனி விழிவழி
ஒழுகுவெங் கனலால்
அண்ட கூடமும் சாம்பராய்
ஒழியுமென்(று) அழியா,
விண்டு நீங்கினர் விண்ணவர் ;
இருசுடர் மீண்ட ;
எண்டிசை சாமுகம் இருண்டன ;
சுழன்ற(து)எவ் வுலகும் !

[வெங்கனல்—கொடிய கோரபாக்கினி. அழிய—(மனம்) அழிந்து. விண்டு—பிரிந்து. இருசுடர் — சூரிய சந்திரர். மீண்ட—மீண்டனர்.]



மதயானைமீது மதோன்மத்தனாக வீற்றிருந்த அந்த இந்திரனுடைய செருக்கையும் செயலையும் கண்டதும், துர்வாஸ மகரிஷியின் விழிகள் கொடிய கோபக் கனலைக் கக்க ஆரம்பிக்கின்றனவாம், எரிமலை நெருப்பைக் கக்குவது போலவே. அண்ட கோளங்களெல்லாம் ஒரு கூடம்போல் அமைந்திருக்கின்றனவாம்: அந்த அண்ட கூடத்தின் மேற்கூரையிலும் தீப்பற்றி எல்லாவற்றையும் சாம்பலாக்கி விடுமோ?— என்று நடுங்கிப் போகிறார்களாம் தேவர்கள். அண்டகூடம் அழிந்து போகுமே என்று அவர்கள் அழிந்து போகிறார்கள் உள்ளத்திலே. அப்படியே மனம் அழிந்து, போய் விடுகிறார்கள் இந்திரனை விட்டு நீங்கி! ஆம்: ஓடிப் போகிறார்கள் தேவர்கள். தேவ ராஜாவை விட்டுப் பிரிந்து ஓடி ஒதுங்கிப் பதுங்கிக் கொள்கிறார்களாம். சூரிய சந்திரர்களும் வழக்கம்போல் சுடர் வீசிச் செல்ல முடியாமல் கதி தடுமாறித் திரும்பி எங்கேயோ ஓடிப் போய் ஒளிந்து கொள்கிறார்களாம். எனவே, திசாமுகங்களெல்லாம் இருள் மூடிப் போகின்றன! உலகங்களெல்லாம் தேவர்கள் எதிர்பார்த்தபடி சாம்பலாகி உதிர்ந்து போகாவிட்டாலும், சுழன்று கொண்டிருக்கின்றன துர்வாஸரின் கோபத்தினாலேயே!

புகைஎ ழுந்தன, உயிர்தொறும்;
　　எயில்பொடித் தவனில்,
நகைஎ ழுந்தன; நிவந்தன
　　புருவநன் னுதலில்;
சிகைஎ ழுஞ்சுடர் விழியினன்,
　　அசனியும் திகைப்ப,
"மிகைஎ ழுந்திடு சதமக!
　　கேள்" என வெகுண்டான்.

[உயிர் — (இங்கே) உயிர்ப்பு; மூச்சு. எயில் பொடித்தவனில் — திரிபுரத்தைச் சாம்பலாக்கின சிவபெருமானைப் போல. நகை — நகைப்பு; சிரிப்பு. நிவந்தன — ஏறிவிட்டன. நன்னுதலில் — நல்ல நெற்றியிலே. சிகை — (இங்கே) ஜ்வாலை. அசனி — இடி. மிகை — மிகுந்த ஆடம்பரம். சதமக — இந்திரனே. வெகுண்டான்—கோபித்தான்.]

அந்தக் கோபம் அந்த மகரிஷியைத்தான் என்ன பாடு படுத்துகிறது பாருங்கள்:

விழியிலிருந்து கனல் ஒழுக, மூச்சிலிருந்து புகை எழுவது போலத் தோன்றுகிறதாம். அந்தக் கோபத்திலே சிரிப்புங்கூட! சிரிப்புக்கள் தொடர்ச்சியாக! சிரித்துப் புரம் எரித்த சிவனார் போலே சிரிக்கிறார் துர்வாஸ முனிவர் இப்போது! புருவங்கள் நெரிந்து நெற்றியில் ஏறுகின்றன. ஆம், தகதகவென்றிருக்கும் அந்த நெற்றியிலே!

கனல் ஒழுகிய கண்கள் இப்போது அக்னி ஜ்வாலையைக் கக்குகின்றன!— என்று சொல்லும்படி அத்தகைய பெருங் கோபத்துடன் முனிவர் பேசத் தொடங்குகிறார் தேவராஜாவை நோக்கி. அந்தக் கோபக் குரலைத் தான் என்னென்பது? இடியும் திகைத்துப் போகும்படி புறப்படுகிறது அந்தக் குரல்!— என்று சொல்லி, அத்தகைய கோபத்தோடு அத்தகைய குரலில் துர்வாஸர் என்ன சொன்னார் என்பதையும் விச்வாமித்திரன் தெரிவிக்கிறான்.

"கர்வம் பிடித்த இந்திரனே! நூறு யாகம் செய்து இந்திர பதவி பெற்ற அந்தச் செருக்கல்லவா உன்னை இந்தப் பாடு படுத்துகிறது? என்ன ஆடம்பரம்! என்ன ஆர்ப்பாடம்!" — என்ற பொருளெல்லாம் உள் அடங்க,

கேள் "என வெகுண்டான்

ன்கிறன் விச்வாமித்திரன்.

தூர்வாஸ கோபத்தை வர்ணிக்கும் இந்த இரண்டு பாடல்களேயும் பாடிப் பாடி பாருங்கள். தசரத சபையில் ஏற்பட்ட விச்வாமித்திர கோபத்தையும் வென்று விடுகிறது இந்தத் தூர்வாஸ கோபம். கோப வர்ணனைகளில் கம்ப னுடைய முதல் பயிற்சி அது என்று கருதலாம்.

சாபம்

தூர்வாஸ கோபம் தூர்வாஸ சாபமாகிறது. அதற்குமுன், தமக்கு அந்த மாலை கிடைத்த வரலாற்றைச் சுருக்கமாகவும் அமைதியாகவும் சொல்லுகிறர்:

பூத நாயகன், புவிமகள்
  நாயகன், பொருவில்
வேத நாயகன் மார்பகத்(து)
  இனிதுவிற் றிருக்கும்
ஆதி நாயகி விருப்புறு
  தொரியல்கொண்டு அணைந்த
மாத ராள்வயின் பெற்றனன்,
  முயன்றமா தவத்தால்.

132

[பூத நாயகன்—பஞ்ச பூதங்களுக்கும் தலைவன். புவி மகள் நாயகன்—பூமி தேவிக்குத் தலைவன். பொருவில்—ஒப்பில்லாத. ஆதி நாயகி—ஆதித் தாயாகிய மஹா லட்சுமி. விருப்புறு—மிக்க விருப்பத்தோடு அணிந்திருந்த. தெரியல்—பூமாலை. அணைந்த—(இங்கே) பெற்று வந்த. வயின்—இடத்தே.]

இவ்வளவு கோபமுள்ள முனிவருக்கும் எவ்வளவு பக்தி! தூர்வாஸ கோபத்தையும் தர்மாவேசமாகக் கருதவேண்டுமென்பது குறிப்பு.

"உன்னுடைய வைபவத்தைப் பார்த்து, இந்திரா! உனக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தேன் அந்த அழகிய பரிசுத்த மாலையை! உன்னுடைய அலட்சிய புத்தியையும் செருக்கையும் பார்க்கும்போது இந்த வைபவம் உனக்குத் தகாது! - என்றே தெரிகிறது. உன்னுடைய நிதிகளெல்லாம், வளங்களெல்லாம் கடலிலே போய் மறைய, நீ துன்பமடைவாயாக!" என்று தூர்வாஸர் சாபம் கொடுத்தார்.

வறுமை நோய் வந்து விட்டது தேவலோகத்திலும். கடைசியாகத் திருமாலின் அருளால் அமிர்தம் பெற்றார்கள் தேவர்கள். சிவ பெருமான் அருளால் விஷ பயத்திலிருந்தும் தப்பிப் பிழைத்தார்கள். அமிர்தம் உண்ட தேவர்கள் அசுரர்களைக் கொன்றுவிட்டார்கள். எனவே, அசுரர்களின் தாயும் காசியப முனிவரின் பத்தினியுமான திதி புத்திர சோகத்தால் மனம் அழிந்து இந்தச் சோலையிலேதான் தவம் புரிந்தாள். இப்படிக் கதையை முடிக்கிறன் விச்வாமித்திரன்.

"கர்வம் கூடாது ...... கடைசியில் தெய்வ சக்திகளே வெற்றி பெறும்' என்ற பாடத்தைத்தான் எவ்வளவு வசீகரமாகக் கற்றுக் கொள்கிறார்கள் ராம லட்சுமணர்கள்!



பி. ஸ்ரீ.

39. அகலிகை வரலாறு

விச்வாமித்திரன் ராம லட்சுமணர்களை அழைத்துக்கொண்டு ஜனக ாராஜாவின் விதேக நாட்டை அடைந்தான். அந்த நாட்டின் தலைநகரான ிலையின் கோட்டை மதிலுக்கு வெளியே தங்கினபோது இவர்கள் ஒரு ற்றிடத்திலே மேடாக உயர்ந்து தோன்றிய கருங்கல் ஒன்றைக் கண்டார்கள். ன் அந்த வழியாகச் சென்றதுதான் தாமஸம், திடீரென்று — என்ன ்திர ஜாலம்! — அங்கே அந்தக் கல் இல்லை; தேஜோ மயமான ஒரு பெண் ி நின்று கொண்டிருந்தாள்.

கண்ட கல்மிசைக் காகுத்தன்
    கழல்–துகள் கதுவ,
உண்ட பேதைமை மயக்(கு)அற
    வேறுபட்(டு) உருவம்
கொண்டு, மெய்உணர்(பு) அவன்கழல்
    கூடிய தொடப்ப,
பண்டை வண்ணமாய் நின்றனள்;
    மாமுனி பணிப்பான்.

[மிசை—மேலே. காகுத்தன்—ராமன். கழல்—அடி. துகள்—தூள். வ—பட்டதனால். உண்ட—(இங்கே) உள்ளம் உண்டிருந்த. பேதைமை க்கு—அஜ்ஞான மயக்கம். மெய்யுணர்பு—மெய்ஞ்ஞானம். பண்டை வண் ம்—பழைய ரூபம். பணிப்பான்—சொல்வான்.]

உவகை பூத்த மின்னற்கொடி

ராமன் பாத தூளி பட்டுத்தான் கருங்கல் அந்தப் பெண்ணுருவம் ஆகி ட்டதாம். "இந்தக் காட்டிலும் ஒரு மஹேந்திர ஜாலமே நடைபெறுகிற லவா, மெய்யுணர்வு இந்த ராமபிரானுடைய திருவடிகளைத் தியான வாயி த் தொட்டதும்?" என்கிறான் கவிஞன். அப்போது உள்ளம் உண்டிருந்த

அஞ்ஞான மயக்கமெல்லாம் அற்றுப் போய் உருவமே வேறுபட்டுப் போகிறதி
அந்த ஞானி தேஜோமயமான உள்ளமும் திவ்ய தேகமும் பெற்று விடுகிறான்
"என்ன அதிசயமான ரஸவாதம்!" என்று சொல்லும்படி. கருங் கல்லா
உள்ளமும் உடம்பும் ஈச்வரனுடைய திருவடி ஸ்பரிசத்தால் பொன்னாவ
போலவே, இந்தக் கருங் கல்லும் ஒரு பொன் மேனி பெற்றுப் பெண்ணாக நின்
றாம். அது அவளுடைய பழைய ரூபம், பழைய அழகு.

மின்னற் கொடி ஒன்று புன்னகை புரிந்து கொண்டே மூவரையு
கண்டு ஒதுங்கி நிற்பதுபோல் நிற்கிறாள். "அவன் யாரோ?" என்ற வி
ராமன் உள்ளத்தில் எழுந்துதானே யிருக்க வேண்டும்? ஆனால் அத்தகை
கேள்வி ஒன்றும் வாயிலிருந்து வெளிப்படவில்லை. எனினும் அந்த வினா
எதிர்பார்த்து அவன் இன்னாளென்று அறிவிக்கிறான் முனிவன்.

"மாயிரு விசும்பிற் கங்கை
மண்மிசை இழித்தோன் மைந்த!
மேயின உவகை யோடு
மின்னென ஒதுங்கி நின்றாள்,
தீவினை நயந்து செய்த
தேவர்கோன் தனக்குச் செங்கண்
ஆயிரம் அளித்தோன் பன்னி
அகலிகை ஆகும்" என்றான்.

134

[மா இரு விசும்பின் — மிகவும் பெரிய ஆகாசத்திலிருந்து. இழி
தோன் — இறக்கிக்கொண்டு வந்த பகீரதன். மைந்த — பரம்பரையில் வந்
புதல்வனே. மேயின — பொருந்தின. நயந்து — விரும்பி. பன்னி — ப
தினி.]

"இதோ உவகையும் நாணமும் ஒருங்கே பூத்த மின்னற் கொடிபோ
ஒதுங்கி நிற்கிறாளே; இவள்தான் உலகப் பிரசித்தமான கௌதம மஹரிஷியின்
பத்தினி; அகலிகை என்று பெயர்" என்கிறான் விச்வாமித்திரன். அந்
மகிழ்ச்சி — அந்தப் புன்னகை — பொன்னகையைக் காட்டிலும் அவளுக்கு
பொருத்தமாயிருக்கிறது! — என்பதைத்தான் "மேயின உவகை" என்கிறான்

சாபம், அனுக்ரகம், அனுதாபம்

தேவராஜா என்று கூடப் பாராமல், "தீவினை செய்தானே!" என்
சாபம் கொடுத்த அந்தப் பிரசித்தியோடு, சாப விவரத்தை முதல் முத
வெளிப்படையாகக் கூறாமல் மறை பொருளாகப் பொதிந்து, "தீவினை
நயந்து செய்த தேவர்கோன் தனக்குச் செங்கண் ஆயிரம் அளித்தோன்" என்
குறிப்பிடுகிறான். இப்படி இதை மறைத்துக் குறிப்பிட்டு, கதை கேட்கு
ஆவலைத் தூண்டுகிறான்.

"தீவினை நயந்து செய்த தேவர்கோன்" என்பது கவனிக்கத் தக்க
தேவராஜாவே அகலிகையைக் காட்டிலும் பெருங் குற்றவாளி என்பது இ
போதே வற்புறுத்தப் படுகிறது.

மஹரிஷியின் மகத்தான சாப சக்தியைச் சொல்லி அவருடைய பத்தினி
என்று அறிவிப்பதற்கு முன்னமே, அவளை விடுவித்த ராமனுடைய மகத்தா
அநுக்ரக சக்தியையும் மறைவாகப் பாராட்டுவதுபோல், "வானத்திலுள்ள க

தையைப் பூமிக்குக் கொண்டு வந்து பூமியை வளமுறச் செய்த பகீரத பரம்பரை ல் வந்தவனே!" என்கிறான் முனிவன்.

முனிவன் சொன்னதை ராமன் அதிசயமாகக் கேட்டான், தான் நிகழ்த்திய புதத்தைக் குறித்து ஒன்றுமே தெரியாததுபோல:

பொன்னைஎய் சடையான் கூறக்
கேட்டலும் பூமி கேள்வன்,
"என்னையே! என்னை யே! இவ்
வுலகியல் இருந்த வண்ணம்:
முன்னைஊழ் வினையி னாலோ?
நடுவொன்று முடிந்த துண்டோ?
அன்னையே அனையாட்(கு) இவ்வா(று)
அடுத்தவா(று) அருளு" கென்றான்.

[எய் — ஒத்த. பூமி கேள்வன் — பூமிக்கு நாயகனான ராமன். என் னயே — என்னே! அனையாட்கு — ஒத்தவளுக்கு. அடுத்தவாறு — ஸ்ருந்த வண்ணம்.]

"என்னே இந்த உலக இயற்கை?" என்று ஆச்சரியப்படுகிறான் ராமன் கலிகைக்குக் கிடைத்த சாபத்தை நினைத்து. "தீவினை நயந்து செய்த தேவர் கோனுக்குத் தண்டனை நியாயந்தான்; ஆனால் இவளுக்கும் இப்படி நேர்ந்ததே! ஊழ்வினையா? அல்லது இந்த ஜன்மத்திலேயே இதற்குக் காரணமாக வள் செய்கையும் ஏதாவது நேர்ந்திருக்குமோ?" என்று கேட்கிறான். அன்னை போலிருக்கிறாளே!" என்று அனுதாபப்படுகிறான். அந்த அகத் ண் அழகை முகத்திலே கண்டதும் ராமனுக்குத் தன் தாயின் ஞாபகம் வந்து டுகிறது. தாடகையைக்கூட முதலில் 'பெண்ணென மனத்திடை' நினைத்த பெருந்தகை'யல்லவா? அகலிகையின் தோற்றத்திலிருந்தும் முக மலர்ச்சியி



விளக்கும் இவன் மனத்தூய்மை உடையவனென்று ஊகித்த ராமன் அ... தாபம் காட்டுவது பொருத்தம் தானே!

அறிவைத் தாழ்த்திய காமம்

அப்போது விச்வாமித்திரன், "ஒரு காலத்திலே தேவேந்திரன் அகலிகையைக் காதலித்து, கௌதம மஹரிஷி ஆச்ரமத்தில் இல்லாத சமயம் பார்த்து அங்கே சென்றான்" என்று அந்தக் கதையைச் சொல்லத் தொடங்குகிறான்.

'தையலாள் நயன வேலும்
மன்மதன் சரமும் பாய,
உய்யலாம் உறுதி நாடி
உழல்பவன், ஒருநாள் உற்ற
மையலால் அறிவு நீங்கி,
மாமுனிக்(கு) அற்றம் செய்து,
பொய்யிலா உள்ளத் தான்தன்
உருவமே கொண்டு புக்கான்.

[சரம் — பாணம். உய்யலாம் — பிழைக்கும்படியான. அற்றம் — பிரிவு.]

அகலிகையின் கண்களாகிய வேல்களும் மன்மதனுடைய பூங்கணைகளும் ஒருங்கே பாய்ந்து விட்டனவாம் தேவ ராஜாவின் நெஞ்சிலே. இதனால் அகலிகை, காதலோடு இந்திரனை நோக்கினாள் என்பது பொருளல்ல. அந்தக் கண்களைப் பார்த்ததும் இந்திரனுக்குக் காதல் பிறந்தது என்பதுதான் குறிப்பு.

அந்தக் காம வேகத்தைக் குறிப்பிடுகையில் "உய்யலாம் உறுதி நாடி உழல்பவன்" என்கிறான் முனிவன். அந்த ஆபத்திலிருந்து எப்படியாவது பிழைக்க வழி தேடி, உபாயம் தேடி, உழன்று கொண்டிருந்தானும் இந்திரன்; தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வழிதேடி அலைந்தான் என்று சொல்லவில்லை! "அவளை அடைய வேணும் அல்லது மறக்க வேணும்" — என்பது அந்தப் பிராணவஸ்தையிலே இந்திரனுக்கு முதல் யோசனையாக இருந்திருக்க வேண்டும்.

எவ்வளவோ முயன்று மறக்கப் பார்த்தான். அந்த முயற்சிகளெல்லாம் அந்தக் கண்களின் அழகை அதிகமாக, அதிகமாக, ஞாபகப் படுத்தியிருக்க வேண்டும். காதலோ பொங்கிக் கொண்டிருந்தது மேலும், மேலும். அறிவைக் கொண்டு அணைபோடப் பார்த்தான். ஆனால் காதல் வெள்ளம் ஒரு நாள் கரை புரண்டு பொங்கி அறிவு என்ற அணையை அப்படியே உடைத்துக்கொண்டு போய்விட்டதாம். உடனே "அதுதான் உய்யும் வழி, பிழைக்கும் வழி!" என்று கௌதம மகரிஷியின் உருவத்தைத் தரித்துக் கொண்டு அகலிகையிடம் போய்ச் சேர்ந்தானும், தந்திரமாக அந்த முனிவரைப் பிரிந்து போகும்படி செய்து விட்டு. பொய்யிலா உள்ளத்தோடு கூடிய முனிவர் போல் வேஷம் போட்டுக் கொண்டு போனானும் பொய்யுடைய உள்ளத்தனான இந்திரன்.

"அப்படிச் செய்யாவிட்டால் பிழைக்க வழியில்லை; ஐயோ! சாகவும் வழி யில்லையே!" என்று தவித்துக் கொண்டிருந்தானும். அமிர்தம் உண்டு

மர வாழ்வு (சாகாத வாழ்வு) பெற்றவனல்லவா? எனவே ஒரே அடியாகச் ாகவும் முடியாமல் செத்துக் கொண்டே யிருக்க வேண்டிய அந்த நரகாவஸ் தையிலிருந்து எப்படித் தப்பிப் பிழைக்கலாம்? — எப்படி உய்ந்து போகலாம்? — என்பதே தனிப் பெரும் பிரச்னையாகி விட்டது இந்திரனுக்கு.

இந்தப் பாட்டிலே "உய்யலாம்" என்ற இந்தச் சொல் எதுகையில் மைந்து - இப்படி யெல்லாம் பிரசங்கம் செய்யும் அழகைப் பாடிப் பாடி அனு விக்க வேண்டும். இந்தச் செய்யுளுக்குத் தனி அழகு தந்து, இவ்வளவு யானிப் பொருளும் தந்து, நம்மை வசீகரிக்கும் மந்திரச் சொல் இது.

அகலிகைக்குத் தேவராஜா என்று தெரியாது; கணவரென்றே நினைத் க் கொண்டிருந்தாள். ஆனால் அவள் மட்டும் தன் சித்த சக்தியைச் சரியான பயன்படுத்திக் கொண்டிருந்தால்?..............விச்வாமித்திரன் சொல்லு றான்:

'புக்கவ ளோடும் காமப்
 புதுமண மதுவின் தேறல்
ஒக்கஉன் டிருத்த லோடும்,
 உணர்ந்தனள்; உவர்ந்த பின்னும்,
"தக்க(து), அன்(று)!" என்ன ஓரான்,
 தாழ்ந்தனள் இருப்பத், தாழா
முக்கணன் அனைய ஆற்றல்
 முனிவனும் முடுகி வந்தான்.

[புக்கு—சென்று. மதுவின் தேறல்—தெளிந்த மது. ஓரான்—ஆராய்ந்து றியாதவளாய். தாழா — தாழ்வில்லாத. முக்கணன் — சிவபெருமான். முடுகி— ரைவாய்.]

"புது மண மதுவின் தேறல்" என்று உணர்ந்த பின்னும் "அது தக் து, அன்று!" என்று அவள் ஆராய்ந்து பார்க்கவில்லையாம், அறிவைக் கொண் சித்த சக்தியைக் கொண்டும். இப்படி விச்வாமித்திரன் சொல்லும்போதே, தற்குத் தானா இவளுக்குத் தண்டனை?" என்று ராமன் நினைக்கக்கூடு லவா? சரி: விச்வாமித்திரன், "கௌதம முனிவர், தாம் வஞ்சிக்கப்பட் தை உணர்ந்து கொண்டதும் வெகு வேகமாகத் திரும்பி வந்தார்" என்று தையைத் தொடர்ந்தார்.



பி. ஸ்ரீ.

40. "கால் வண்ணம் இங்குக் கண்டேன்!"

கௌதம மஹரிஷி ஆச்ரமத்துக்குத் திரும்பியதும் அகலிகை
படியே பயந்து நின்று விட்டாள். இந்திரனோ நடுநடுங்கி ஒரு பூனையாய்
கே யிருந்து நழுவி விடப் பார்த்தான்:

சரம்தரு சாபம் அல்லால்
 தடுப்பருஞ் சாபம் வல்ல
வரம்தரு முனிவன் எய்த
 வருதலும், வெருவி, மாயா
நிரந்தரம் உலகில் நிற்கும்
 நெடும்பழி பூண்டாள் நின்றாள்;
புரந்தரன் நடுங்கி ஆங்(கு)ஓர்
 பூசையாய்ப் போக லுற்றான்.

[சரம் — பாணம். சாபம் — வில்; ரிஷிகளின் சாபம். தடுப்பரு —
த்க முடியாத. மாயா — மாயாமல், அழியாமல். நிரந்தரம் — எக்காலத்தி
ம். புரந்தரன் — இந்திரன். பூசை — பூனை. போகலுற்றான் — போகத்
தொடங்கினான்.]

கௌதம மகரிஷிக்கு வரம் கொடுக்கும் அனுக்கிரக சக்தியும் உண்டு,
ம் கொடுக்கும் சக்தியும் உண்டு. இவருடைய சாபம் எவராலும் தடுக்க
யாதாம். வில்லம்பைக் காட்டிலும் இவரது சொல்லம்பு அவ்வளவு கொடிய
ன்கிறான் கவிஞன். அத்தகைய சாபமும் குற்றத்திற்குப் பிராயச்சித்தமாகி
வில் நன்மை தருவதால் "சாபம் வல்ல வரம்தரு முனிவன்" என்கிறான்
ளதமரை.

அகலிகையின் 'நெடும்பழி'

இவ்வளவு ஜாக்கிரதையாக விசேஷணம் கொடுக்கும் கவிஞன்,
லிகையை "மாயா நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள்"
று கூறுவது கொஞ்சம் அதிசயமாகவே யிருக்கிறதல்லவா? தேவேந்

திரனைத் "தீவினை நயந்து செய்த தேவர்கோன்" என்று கூறி, அவன் கௌத
வேஷம் பூண்டு வந்து அவளை வஞ்சித்தான் என்றும் கூறிவிட்டு, அகலிகை
இவ்வளவு தூரம் பழித்துப் பேசவேண்டுமா, விச்வாமித்திரன் கூற்றாக ?

"காமப் புதுமண மது" என்று அந்தப் புதுமையை உணர்ந்த பின்னு
"தக்கது, அன்று" என்று பகுத்தறியாத அந்த ஒரு குற்றம் தானே அக
கைக்கு? அந்தக் குற்றத்திற்கும், விச்வாமித்திரனே "காமப் புது மண மது
என்ற அந்தச் சொல் - தொடரிலேயே ஒரு வகைச் சமாதானம் தருகிறானே
"அந்த மது வெறியில் மயங்கி விட்டாள், சித்த சக்தியை இழந்து தாழ்ந்
விட்டாள் !" என்று சொல்லி விட்டானே ?

அகலிகையின் குற்றத்தை இவ்வளவு லேசாக்கி விட்டு, இப்போ
"மாயா நிரந்தரம் உலகில் நிற்கும் நெடும் பழி பூண்டாள்" என்று விச்வ
மித்திரன் சொல்வதற்குக் காரணம்தான் என்ன ? கௌதம மகரிஷி வந்
விட்டார் ; கடுங்கோபத்துடன் அகலிகையை நோக்கினார் ; அவளுக்கும் ஒ
கொடிய சாபம் கொடுக்கப் போகிறார் ! அந்த மன நிலையோடுதான் விச்வாமி
திரனும் — ஏன்? கவிஞன் கூட — இப்போது அகலிகையை நோக்குகிறான்



" வஞ்சிக்கப்பட்டோமே ; மது மழுங்கு, ...

...ாமே ! கௌதம பத்தினியாகிய நமக்கும் இப்படி நேர்ந்ததே !" என்றெல் ...ம் எண்ணச் சுழல்களில் அகப்பட்டு, மஹரிஷியைக் கண்டதும் பயந்து அப் ...டியே நின்று விட்ட அகலிகையின் அப்போதைய மன நிலையையும் கலைக்கண் ...காண்டு பார்த்துத்தான் கவிஞன் அந்த நெடும் பழியை இப்படி வற்புறுத்து ...து போலத் தோன்றுகிறது.

கௌதமர் சுடுசொல்

இது எப்படி யிருந்த போதிலும், அகலிகையை வஞ்சித்துக் கௌதமரை ...ம் வஞ்சிக்கத் துணிந்த இந்திரனை, எலியை வஞ்சித்துப் பிடிப்பதிலும் நம்மை ...ஞ்சித்துப் பாலைக் குடிப்பதிலும் வல்ல பூனையோடு ஒப்பிடுவது எவ்வளவு ...பாருத்தம் !

முதல் முதல் பூனையாக நழுவப் பார்த்த இந்திரனைச் சபித்தார் கௌதமர் ...மனை நோக்கி விச்வாமித்திரன்,

> தீவிழி சிந்த நோக்கிச்
> செய்ததை உணர்ந்து, செய்ய
> தூயவன், அவனை நின்கைச்
> சுடுசரம் அனைய சொல்லால்,

[செய்ய — செம்மையான. சுடுசரம் — சுடுகின்ற அம்பு.]

...பித்து விட்டான் கௌதமன் என்கிறான். கௌதம சாபம் என்ற அந்தச் சுடு ...சால்லுக்கு, ராமனை நோக்கிச் சொல்லும் கதையில், ராம பாணம் என்ற சுடு ...ரத்தையே உபமான மாக்குவது எவ்வளவு பொருத்தமானது ! " அந்தச் சுடு ...சால் தவறாமல் விரைவிலே பலன் தருவதுபோல், ராமா ! உனது சுடு ...ரமும் குறி தவறாமல் விரைவிலே துஷ்ட நிக்கிரகம் செய்து வருகிறது, இன்னும் செய்யப் போகிறது !" என்று ராமனை உக்ஸாகப் படுத்துவதும் எவ்வளவு சாதுரியமாக நடைபெறுகிறது !



கௌதம சாபம் பெற்று அந்தச் சுடு சொல்லால் விகாரமடைந்த உருவத்துடன் இந்திரன் போய்விடுகிறான். அவன் போன பின்பு அகலிகைக்கும் சாபம் கொடுக்கிறார் மகரிஷி :

> மெல்லிய லாளை நோக்கி,
> " விலைமகள் அனைய நீயும்
> கல்இயல் ஆதி !" என்றான்.
> கருங்கலாய் மருங்கு வீழ்வாள்.

[மெல்லியல் — பெண் ; (இங்கே) அகலிகை. கல் இயல் — கல்லின் இயல்பு. ஆதி — ஆவாய். மருங்கு — அந்தப் பக்கத்திலே.]

" காமப் புதுமண மது " என்று உணர்ந்த பின்னும் " தக்கது அன்று " என்று பகுத்தறியும் விவேகத்தையும்

சித்த சக்தியையும் இழந்து தாழ்ந்து கிடந்ததால், அகலிகையைக் கல்லாகும்படி சபித்து விட்டாராம். இப்படிக் கல்லாக்கிய சுடு சொல்லைக் காட்டிலும், "விலை மகள் அனைய நீயும்" என்ற எச்சரிக்கிய சுடு சொல் அவளை எவ்வளவு அதிகமாய்ச் சுட்டிருக்கவேண்டும்!

விமோசனம்

கல்லாய் விழுவதற்கு முன் "இந்தச் சாபத்திற்கு ஒரு முடிவை அனுக்கிரகிக்க வேணும்" என்று அவள் வேண்டிக்கொள்ள, கௌதமர் சாப விமோசனம் அருளினாராம்:

"பிழைத்தது பொறுத்தல், என்றும்
பெரியவர் கடனே என்பர்:
அழல்தரும் கடவுள் அன்னாய்!
முடி(வு)இதற்(கு) அருளு" கென்னத்
"தழைத்துவண்(டு) இமிரும் தண்தார்த்
தசரத ராமன் என்பான்
கழல் - துகள் கதுவ இந்தக் 140
கல்லுருத் தவிர்தி!" என்றான்.

[அழல் தரும் கடவுள் — அக்கினி பகவான். அன்னாய் — போன்றவனே. வண்டு இமிரும் — வண்டுகள் ஒலித்தற்கு இடமான. தண்தார் — குளிர்ந்த பூமாலை. கழல்-துகள் — பாத தூளி.]

கௌதமருடைய கோபமும் அக்கினிபோல் இருக்கிறது; அவருடைய சுடு சொல்லாகிய சாபமும் அக்கினிபோலவே சுடுகிறது! எனினும் மாசுகளைச் சுட்டெரித்துத் தூய தங்கமாக்கும் சக்தியும் தூய்மையும் அந்தக் கோபத்திலும் சாபத்திலும் அடங்கிக் கிடக்கின்றனவாம். இத்தகைய கருத்துக்களை உய்த்துணர வைக்கிறது, "அழல் தரும் கடவுள் அன்னாய்!" என்று அகலிகை தன் கணவரை நோக்கிக் கூறுவது.

தேவர்கள் வேண்ட, தேவேந்திரன் சாபத்தையும் ஒருவாறு போக்கி வைத்தார் கௌதமர். இப்படிக் கதை சொல்லும் விச்வாமித்திரன், "அந்த அழகிய அகலிகைதான் கல்லாய்க் கிடந்தாள்!" என்று கதையை முடிக்கிறான்.

"இப்போது பெண்ணாய் நிற்கிறாள்; எல்லாம் உன் மகிமைதான்!" என்பதைத்தான் எவ்வளவு ரஸமாகவும் விளையாட்டாகவும் சொல்லுகிறான் முனிவன்:

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்:
இனி இந்த உலகுக் கெல்லாம் 141
உய்வண்ணம் அன்றி, மற்றோர்
துயர்வண்ணம் உறுவ துண்டோ?
மைவண்ணத்(து) அரக்கி போரில்,
மழைவண்ணத்(து) அண்ணலே! உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்;
கால்வண்ணம் இங்குக் கண்டேன்

[உய் வண்ணம் — உய்யும் வகை. மற்றோர் — வேறுபட்ட ஒரு துயர் வண்ணம் — துயரத்தின் வகை. மை வண்ணம் — கரிய மை போன்ற

நிறம். மழை வண்ணம் —மழை மேகத்தைப் போன்ற நிறம். வண்ணம் - என்பதற்கு, "தன்மை, நிறம்" முதலான பொருள்களுமுண்டு.]

கைவண்ணமும் கால்வண்ணமும்

நல்லவனுக்கு வந்த துரதிர்ஷ்டமும் விசேஷ நல்லதிர்ஷ்டம் ஆகி விட்டதாம். தாடகை வதத்தில் துஷ்ட நிக்ரகமாகிய 'கை வண்ணம்' கண்டவர், அகலிகையின் சாப விமோசனத்திலே சிஷ்ட பரிபாலனமாகிய "கால் வண்ணம்" கண்டாராம். எனவே "இனித் தீயோர் அழிவர்; நல்லோர் நலம் பெறுவர்; உலகம் உய்ந்து போகும்" என்றெல்லாம் நம்பிக்கைகள் எழுகின்றன முனிவன் உள்ளத்திலே அலை அலையாக. தொலைதூரத்திலே நடைபெற இருக்கும் ராவண வதத்தைக்கூட விச்வாமித்திரன் இப்போதே நடந்துவிட்டதுபோல், கனவு கண்டு குதூகலப் படுவதுபோலத் தோன்றுகிறது.

இந்த அழகான பாட்டிலேதான் எத்தனை ஆழ்ந்த கருத்துக்கள் எத்தனை சப்த ஜாலங்களால் எவ்வளவு வசீகரமாக வெளிப்படுகின்றன! இந்த 'மை வண்ண'மும் 'மழை வண்ண'மும்தான் எவ்வளவு சாதுர்யமாக வந்து விழுகின்றன; வந்து விழுந்து 'கை வண்ண'த்தையும் 'கால் வண்ண'த்தையும் எவ்வளவு மோகனமாக எடுத்துக் காட்டுகின்றன!

தாடகையும் கறுப்பு; ராமனும் கறுப்பு. எனினும் அவள் அழித்தவள்; இவன் அளிப்பவன். அந்த மைவண்ணம் ஹிம்ஸை, பொய், வஞ்சனை முதலியவற்றின் அறிகுறி. இந்த 'மழை வண்ண'மோ கருணைக்கும், உண்மைக்கும்

தியாகத்திற்கும் அறிகுறியாகி, அந்த வான வில்லின் மோகன சௌந்தர்யத்தை யும் நினைப்பூட்டுகிறது. ராமன் 'கால் வண்ண'த்தால் 'பண்டை வண்ண'மாகி —அதாவது பழிபூண்டதற்கு முன்பு இருந்த வண்ணமாகவே—எழுந்து உவகை யோடு நின்றாளாம் அகலிகை. அவளை ராமன் அப்போதே அன்னையென்று குறிப்பிட்டான். இப்போதும் அன்னை என்று குறிப்பிடுகிறான். பிறகு விச்வா மித்திரன் ராம லட்சுமணரோடும், அகலிகையோடும் கௌதம முனிவரது ஆச்ர மத்தை அடைகிறான்.

'நெஞ்சினால் பிழைப்பிலாள்'

விச்வாமித்திரன் கௌதமரை நோக்கி,

"அஞ்சன வண்ணத் தான்தன்
அடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோல் இடையாள் முன்னை
வண்ணத்தள் ஆகி நின்றாள்!
நெஞ்சினால் பிழைப்பி லாளை
நீஅழைத் திடுக" என்னக்
கஞ்சமா முனிவன் அன்ன
முனிவனும் கருத்துள் கொண்டான். 142

[அஞ்சன வண்ணத்தான் — ராமன். வஞ்சிபோல் இடையாள் — வஞ் சிக் கொடிபோல் இடையினை உடைய அகலிகை. கஞ்சமா முனிவன் — தாமரை மலரில் வாழும் பிரம்ம தேவன்.]

அப்பால் ராமன் கௌதமனை வணங்கி வலம்கொண்டு துதித்து அகலிகை யை அந்த மஹரிஷியின் வசத்திலேயே ஒப்பிக்கிறானும் :

குணங்களால் உயர்ந்த வள்ளல்,
கோதமன் கமலத் தாள்கள்
வணங்கினன் வலங்கொண்(டு) ஏத்தி,
மாசறு கற்பின் மிக்க
அணங்கினை அவன்கை ஈந்(து),ஆண்டு
அருந்தவ னோடும் வாச
மணம்கிளர் சோலை நீங்கி
மணிமதில் மிதிலை கண்டார். 143

[கோதமன் — ராமன். ஆண்டு — அப்பொழுது. அருந்தவனோடு — (இங்கே) விச்வாமித்திரனோடு. கிளர் — வீசுகிற. மணிமதில் — அழகும் உறுதியும் வாய்ந்த மதில்.]

ராமன் அகலிகையை மஹரிஷியின் வசமாக்கியதை "அவன் கை ஈந்து" என்று கூறுவது கவனிக்கத் தக்கது. புதிதாக ஒரு கன்னிகையைப் பாணிக் ரஹணம் செய்து கொடுத்தது போன்ற ஒரு குறிப்பு — ஒரு தொனிப் பொருள் — கிடைக்கிறதல்லவா ?

அகலிகை கதை பிரசித்தமானது ; சங்க காலத்திலும் பிரசித்தமாகத் தமிழ் நாட்டில் வழங்கி வந்தது. பழைய தமிழர்களுக்கிடையே வழங்கி வந்தபடி இக் கதையை மாற்றி அமைக்கும் கம்பன், அகலிகையை 'நெஞ்சினால் பிழைப்பிலா ளாக்குகிறான் ; தேவராஜனைத் 'தீவினை நயந்து செய்த தேவர்கோன்' ஆக்கு கிறான். இத்தகைய மாறுதலால், ஆண்மகனது வஞ்சனையே பெண்மையின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ற கொள்கையை உய்த்துணர வைக்கிறான்.